உ

கணபதி துணை.

தென்காசித் தாலூகா மாறாந்தை மாநகரில்
மாண்பாய் சமாதி கொண்டருளிய
செட்டியப்பன்சீர்புனைந்துசிவனடியெய்திய

சற்குருநாதர்

சரித்திரம்,

மாறாந்தை அருணாசலம்பிள்ளையவர்கள் குமாரர்
முரம்பை மா. அ. செண்பகக்குமாரு பிள்ளையால்
இயற்றப்பெற்று

ஸ்ரீமது சுப்பிரமணியத் தம்பிரான் அவர்களால்
பார்வையிடப்பெற்றதை

திருநெல்வேலி ஜங்ஷன்
கணேசன் பிரிண்டிங் பிரஸில்.
பதிப்பிக்கப்பெற்றது.
விபவ வருடம்

இதன் விலை] 1928. [அணா 6

THE MADURA TAMIL SANGAM
ACL-FTS 00368
4142

நூல் அன்பளிப்பு
தமிழக வேளாண்மைத் துறை
அமைச்சர் மாண்புமிகு
கா. காளிமுத்து, எம்.ஏ.

THE MADURA TAMIL SANGAM

திருநெல்வேலி [illegible]ன் கண்ணுள்ள

மாறாந்தை மாநகரின்

மாண்பாய் சமாதி கொண்டருளிய

செட்டியப்பன் சீர்புனைந்து சிவனடியெய்திய

சற்குருநாதர் சரித்திரம்.

ஷை நகரவாசிகள் அடியார்கள் வேண்டுகோளின்படி

திருவாவடுதுறை ஆதீனம் பெரியபூசை

ஸ்ரீமது சுப்பிரமணியத்தம்பிரான் அவர்களின்

மாணாக்கர்களிலொருவரும்

ஷை மாறாந்தை அருணாசலம்பிள்ளையவர்கள்

குமாரருமான

முரம்பை மா. அ. செண்பகக்குமாரு பிள்ளையால்

இயற்றப்பெற்று

ஷை சுவாமிகளால் பார்வையிடப்பெற்று

புதுக்கோட்டையைச் சார்ந்து புகழுடன் மலரால்பொருந்திய

பனையபட்டி மாநகரத்தில் வசிக்கும்

திருவாளர் சி. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களின்

கநிட்ட குமாரர்

திருவாளர் சி. மு. சின்னையாசெட்டியார் அவர்களின்

திரவிய உதவியைக்கொண்டு

திருநெல்வேலி ஜங்ஷன்

கணேசன் பிரின்டிங்பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றன.

விபவவருடம்.

மெய்கண்டான் ஆண்டு 706 கார்த்திகைத்திங்கள்

இதன் விலை] 1928. [அணா 6.

உ

கணபதி துணை.

உரிமையுரை.

பூவினிற் சிறந்து புகழுடைத்தாய புதுக்கோட்டை இராச்சியத்தைச் சேர்ந்த பனையபட்டி நகரில் ஸ்ரீமான் சி. முத்துக்கருப்பன் செட்டியாரவர்களின் குமாரர்களில் இளையோரான ஸ்ரீமான் சி. மு. சின்னையாசெட்டியாரவர்களுதவிய பொருளைக் கொண்டு மாருந்தை சற்குருநாதர் சரித்திரம் அச்சியற்ற ஏதுவாயிருந்த தற்கெனது மனமுவந்த வந்தனமவர்கட்கு மாண்பாயளிக்கின்றேன்.

நப்போல் வளைபெனும் கரைமுகாட்டியைக் கடைப்பிடித்து தன்கிளைதழுவாத் தாட்டிகர் தரணியிலிலரெனச் சாற்றுவர் அதற்கிணங்க நமது சற்குருநாதரின் பூர்வாச்சிரம முதலியவற்றைக் கவனித்தே பொருளளித்தனரெனச் சிலர் கொள்ளவுங்கூடும். ஆனாலது யென்போலொத்த சிறுவர்களின் சிறுமையேயாகும்.

அச்சியற்ற வாங்கருவியா யிருந்தெனக்கார்வமும் ஆற்றலுமளித்த நமது சி. மு. சின்னயாசெட்டியாரவர்கள் உருவத்திற் இளையவும் அறிவிற்கேற்பவும் மிகவும் பெரியவர்களே.

செயற்கரிய செய்தனராதலால் அத்துடன் அவர்கள் பெயரும் சின் அய்யா என்றிருப்பதால் அவர்களொரு ஞானமயப்பிண்டமாயிருந்து ஞானத்தை ஞானமறியு மென்பதற்கேற்ப அறிந்து நமது சற்குருநாதரின் திருவடிக்கே அறத்தாலாற்றிய பொருளை அளித்தார்களென்பதே எனக்கு ஆனந்தகான ஸ்நான பலன் பெற்றதாக்கும்.

ஆகையால் அவர்களது அன்புக்கும் அன்புநிறைந்த பொருளுதவிக்கும் எனது மனமார்ந்த வந்தனம் மான்புடன் மறுத்தும் மறுத்தும் உரித்தாகின்றது.

மாருந்தைச் சற்குருவின் மாசரிதம் மண்ணுலகி
லேறியுல குப்பபொருளீந்து வந்து—பேறுறும்
சின்னய்யா செட்டி கொடை சேரவொன்று மில்லென்று
நன்னயமாய் நான்நாட்டுவேன்.

மெய்கண்டான் ஆண்டு 706
கொல்லம் 1104 கார்த்
திகைத்திங்கள் 7-ம் நாள்
மூப்பநாடெனும் மூப்பை

இங்ஙனம்,
உழுவலன்பன்
மா. அ. செண்பகக்குமாரு,
நூலியற்றினோன்.

4142

THE MADURA TAMIL SANGAM

உ

கணபதி துணை.

ஞயவுரை.

இப்பரதகண்டத்தில் பாண்டிவள நாட்டில் தாம்பிரவர்ணி தீரத்தில் சகல வளமுமோங்கிய தாருகா வனமெனும் திருநெல்வேலிக்கடுத்த குடதிசைக்கண் பத்தாவது மைலிலும் தென்பொதிகாசலச் செந்தமிழ் முநிவன் தெரிசித்துய்யத் திருவுளங்கொண்டு திருமால் முடிமேற் றிருக்கரந்தீண்டி சிவனுருவாக்கித் தெரிசனஞ்செய்த திரிகூட சைலத்திற்கு குணக்கின்கண் இருபத்தேழாவது மைலிலும் உள்ள புராதனப் பதியாகியும் மாறனால் தாதிக்கு நன்களிக்கப்பெற்று மாறன் தாதிநல்லூரென ஆன்றோர்களாற் சொல்லக்கேட்டுகந்த மாறாந்தை நகரில் நம்முன்னோர்கள் செய்த தவப்பேற்றினால் இந்த சரித்திர நாயகனாகிய சற்குருநாதர் சமாதி கொண்டருளினார்.

அடியார்களுய்ச் சிவிக்க வந்தெழுந்தருளிய ஷை சற்குருநாதர் சரித்திரத்தை செய்யுள் ரூபமாக அமைக்கப்பெற்றது. அவ்விதம் அமைத்த நூலை நன்காராய்ந்து வழுக்களைந்து வளமும் வசியுமுதவி வாக்களித்த திருவாவடுதுறை ஆதீனம் பெரியபூசைச்சாமியும் ஷை ஆதீன வித்துவானும் முரம்பை மடாலய பதியாயும் எனது ஆசிரியருமான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியத்தம்பிரான் சுவாமிகளின் பேருதவி எனது கண்ணும் கருத்தும் விட்டகலா. அவர்களிது கண்டுகளிக்கக் காலமின்றி குஞ்சித சரணக் குறுகினாராதலால் அவர்களுக்கெனது உழுவல்வந்தனம் உரித்தாகின்றது.

மேலும் பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவருரை முகத்து நூன் மாணாக்கரான நமது ஸ்ரீலஸ்ரீ செப்பறை சுவாமிகளெனும் சிதம்பரசுவாமிகள். முரம்பை காணாடுகாத்தான் ஆதிசைவத் திருவாளர் ப. கயிலாசப்பட்டர் அவர்கள். திருவாழிமாநகர் திருக்குறட் புலமை ஸ்ரீமத் சோலைமலை அய்யங்காரவர்கள், ஷை நகர் இராமயணப்புலமை ஸ்ரீமத் இராம

சுவாமி அய்யங்கார் அவர்கள். வல்லை சைவத்திருவாளர் ந. வேலாயுதஞ் செட்டியார் அவர்கள். ஷை ஷை பாடசாலை உபாத்தியாயர் வீரபெருமாள்பிள்ளை யவர்கள். ஷை ஷை ஷை சண்முகசுந்தரம்பிள்ளை யவர்கள். எனது வித்தியாகுரு அவர்கள் தொகித்திரனும் புளியங்குளம் பாடசாலை உபாத்தியாயருமான உயர்திருவாளர் சிவசுப்பிரமணியபிள்ளை யவர்கள்.

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா சிலவார் நகரம் வசிக்கும் கவிராயர் கோயில் திருவாசகம் உயர் திருவாளர் சண்முகபிள்ளை யவர்கள். தென்னார்காடு ஜில்லா சிதம்பரந் தாலூகா நகரமலை நகரில் வசிக்கும் சித்திரக்கவி உயர்திருவாளர் நா. இராமலிங்கம்பிள்ளை யவர்கள். திருநெல்வேலி நகர் அறம்வளர்த்த தெரு வென்னும் சுடலைமாடசுவாமி கோவிற்றெருவில் வசிக்கும் உயர்திருவாளர் ஆர்.எஸ். சுப்பிரமணியபிள்ளையவர்கள். ஸ்ரீவைகுண்டம் தாலூகா முப்பநாடெனும் முரம்பை மாநகரில் வசிக்கும் உயர்திருவாளர் ஆ. குற்றாலலிங்கம்பிள்ளை யவர்கள். ஷை தாலூகா வல்லைப்பதியில் வசிக்கும் பிரம்மஸ்ரீ சங்கரசுப்பாசாஸ்திரி யவர்கள். திருநெல்வேலித் தாலூகா இராஜைபம்பதியிலும் திருநெல்வேலி சுடலைமாடசுவாமி கோயிற்றெருவிலும் வசிக்கும் உயர்திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை யவர்கள்.

உள்ளிட்ட முகவுரை சாற்றுக்கவி முதலியவுதவின அருமபெரும் ஆன்றோர்களுக்கு மெனது மனமுவந்த வந்தனம் மாண்புடனுரித்தாகின்றது.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு என்பதற்கியைய சாஸ்திரிகளுதவி சாற்றவும் போற்றவும் தக்கதே.

என்பதுடன் மேற்கண்ட பெரியோர்க ளிச்சிறியேனையு மோர் பொருட்படுத்தி எனது நூலின் பொருட்டென்னைக் கனப்படுத்தியதற்கு மெனது தாழ்மையான வந்தனம் தக்கவாறு மென்மேலும் உரித்தாகின்றது.

மெய்கண்டான் ஆண்டு 706
கொல்லம் 1104
கார்த்திகை திங்கள் 7ம் நாள்
முப்பநாடெனும் முரம்பை

இங்ஙனம்.
உழுவலன்பன்
மா. அ. செண்பகக்குமாரு,
நூலியற்றியோன்.

4142

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

உ

கணபதி துணை.

முகவுரை.

பொருட் செல்வமே எல்லாச் செல்வங்களினும் ஏற்றமுடையதென்றெண்ணி அதனை ஈட்டும் தொழிலில் உயிரும் உடலுமாக ஈடுபட்டு நிற்கும் இக்காலத்தில் அச்செல்வத்தின் உண்மைத்தன்மையை உணர்ந்து "செல்வன்" செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம் எனத்தெளிந்து கற்றறிந்தடங்கிய ஓர் ஆன்றோர் வரலாற்றை இந்நூல் விளக்கிக்கூறுகின்றது. கனகமாமணி பெருகும், காரைக்குடி நகரில் தனவைசியரென்னும் தகைசான்ற மரபில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வான்றோர் தோன்றினர். செல்வம் மல்கிய சீரிய குலத்தில் பிறந்தும் ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் உயரிய உள்ளத்துறவமைந்த இப்பெரியார், சில ஆண்டுகள் இல்லறமாகிய நல்லறம் நிகழ்த்தி அறவோரையும் துறவோரையும் ஆதரித்து வந்தார். அப்பால் ஈசனருள் கூடுதலால் மனைவி மக்களை நீத்து பழங்கந்தை புனைந்து, பரம்பொருளைக்காணும் ஆசையில் கருத்தூன்றி நின்றார்,

"பெருங்குளிர்க் குடைந்தகாலைக் கருந்துணி
பலதொடுத்திசைத்த ஒருதுணி யல்லது
பிறிதொன்று கிடையாதாக வறுமனைக்
கடைப்புறத்திண்ணை யல்லது கிடைக்கைக்கு
இடம் பிறிதில்லையாக"

என்று குமரகுருபர அடிகள் வேண்டிய விழுமிய நிலை இப்பெரியார்க்கு வாய்த்தது. பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து அடிவருந்த நடந்து "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்" என்று பொய்யடிமை யில்லாப்புலவர் போற்றிய செந்திலம்பதியை அடைந்து, முருகப்பெருமானை மனமொழி மெய்களால் வணங்கிப்பின் நெல்லைவலி நாதரைப்பணிந்து குற்றாலநாதரை நோக்கிக் குழைந்து நடந்து செல்லும் பொழுது மாறாந்தையூர் செய்த மாதவத்தால் இவ்வான்றோர் அங்கு சென்று தங்குவாராயினர். அருந்தவப்பெருமை வாய்ந்த பெருந்தகையார் அங்கு உறைந்து அறவுரை நிகழ்த்துங்கால் அவ்வூரில் பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும் வளமும் சுரந்து விளங்குவதாயிற்று. "செல்வமென்பது சிந்தையின் நிறைவே" என்னும் சீரிய உண்மைக்குச் சான்றாய் அமைந்த இவ்வான்றோர் இறைவனுடன் இரண்டறக்கலந்து இன்பப்பேறடையக் கருதி ஓர் நன்னாளில் நிட்டைகூடிச் சித்தியெய்தினர். மாறாந்தைக் காளிகோவிலுக்கு அருகே அமைந்த நறுமணம் கமழும் நந்தனவனத்தில் இப்பெரியாரது சமாதி சிறப்புற்று இலங்குகின்றது. இத்தகைய சான்றோர் வாழ்க்கையை செம்மை சான்றகவிகளால் அமைக்கும் பெருமை காராள குலக்கவிஞராய செப்பறை செண்பகக்குமாருப்பிள்ளை அவர்களுக்கு வாய்த்ததை நினைந்து மிகமகிழ்கின்றேன். ஆற்றொழுக்குப் போன்ற அருங்கவிகளால் அன்பு ததும்ப ஆன்றோர் வரலாற்றை எழுதி யுதவிய பிள்ளையவர்கள் புகழொடு புண்ணியமும் எய்தி அடிகளது அருள் பெற்று உய்வார் என்பதில் யாதும் ஐயமில்லை.

ரா. பி. சேதுப்பிள்ளை,

24—9—28.

உ

கணபதி துணை.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகமூர்த்திக்கு பதினாறாவது பிற்றோன்றலாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் பால் மூவகைத் தீக்ஷையும் முறையாகப் பெற்று ஷை ஆதீன வித்வானும் ஞானநடராஜப் பெருமான் அருட்பணியாகிய அவ்வாதீன பெரிய பூஜைப் பணிபுரிந்து வருபவரும் முரப்பநாடு என்று வளங்கும் மூரம்பை ஈசான்ய மடாலயபதியாகியும் விளங்கும

சுப்பிரமணியத்தம்பிரான் சுவாமிகள்

அருளிச்செய்த

சிறப்புப்பாயிரம்.

கட்டளைக் கலித்துறை.

1. அற்புத மாகுந் தமிழ்மா மறையை யருத்தியுடன்
பற்பக லாய்ந்து பகவனைச் சிந்தனை பண்ணிவரும்
நற்றிற மார்தரு மாறுந்தை யென்னு நகரிலுறை
சற்குரு நாத னெனும பெரியார் தஞ் சரிதமிதே

2. விற்பன ராகிய மாறுந்தை வாழும் விழுமியர்கள்
சொற்படி யச்சரி தத்தை யெடுத்துத் தொகுத்துரைத்(தான்
பற்பல நற்கலை நம்பாலு மோர்ந்த பரிசுடையோன்
கற்பனை துன்னுங் கவிபல செய்யுங் கவிவலனே

3. மன்னிய நல்வள மாறுந்தை தன்னில் வதிதருஞ்சீர்
துன்னிய நல்லரு ணாசலத் தோன்றல் சுதன்சுகுணன்
கண்ணிநன் னாட்டிற் கயிலாச நாதன் கவின்றணிசேர்
பன்னரும் புண்ணியர் வாழுமு ரம்பைப் பதியுளனே

4. சீர்செண் பகக்கு மரனெனு நாமந் திகழ்தருவோன்
நார்துன் னிருதயன் ஞானிக டாமகிழ் நல்லறிவன்
தார்செங் கழுநீர்த் தெரிய லணியுந் தகைவருணன்
வார்செஞ் சடில னருட்டாளைத் தாங்கிட வாழியவே

5. வாழிய சற்குரு மாதவன் வாழிய வாழியவே
வாழிய சற்குரு மாதவன் நற்றளி வாழியவே
வாழிய நல்வள மாருந்தை யன்பர்கள் வாழியவே
வாழிய வையக மாரி பெருகிட வாழியவே.

மெய்கண்டான் யாண்டு ௭௱௪
கொல்லம் யாண்டு 1103
ஆவணித்திங்கள் ௨௰௨ம் நாள்
முராப்பநாடென்று பெயர்
வளங்கிய முரம்பை.

இங்ஙனம்
சுப்பிரமணியத்தம்பிரான்
ஈசான மடாலயபதி
முரம்பை.

உ

கணபதிதுணை,

ஸ்ரீவைகுண்டந்தாலூகா முராப்பநாடென பெயர் வளங்கும் முரம்பைமாநகரின் கண் யாவரும் எளிதில் நன்குணரத் தமிழ்மாமறை புத்தகசாலை சொந்தத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறவரும் சிவநேசச் செல்வருமாகிய ஷையூர் திருவாளர்.

ஆ. குற்றாலலிங்கம்பிள்ளையவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்

எழுசீரடியா சிரியவிருத்தம்

1. திருப்பொலி பாண்டி நாட்டினி லென்றுஞ்
சிறந்திடுஞ் சாலிநேர் குடக்குத்
தருப்பொலி பொழில்குற் றாலத்தின் குணக்குச்
சார்புள மாறையம் பதியின்
மருப்பொலி குழன்மா தங்கிசந் நிதியில்
வாழ்ந்தெழில் சற்குரு நாத
னருட்பொலி யவர்த மற்புதமாகு மரியமா
சரிதமற் றதனை

2. அந்நகரடியா ரக்குருவறைய வமைத்ததை
யன்புடன் முரப்பை
என்னது நற்கோத் திரஞ்செப்பு திரையி
விளைதருஞ் செண்பகக் குமரன்
றன்னிடங் கொடுத்துத் தழைகவி யாகச்
சான்றவ செய்கென வேண்ட
பன்னரு முழுவ லன்புடன் செய்தான்
பகரருஞ் செந்தமிழ்ப் பாவால்

3. மாதவப் பெரியார் சரித்திர நரவ மாங்கிய
வடியர்செய் பவங்க
ளாளதவன் முன்பு பணியென வேக வற்புத
சற்கு நாதன்
றாதவிழ் பாத தாமரை யிறைஞ்சி சாற்றுமக்
குரவர்சந் நிதியி
லோதிமிக் குடைய வுத்தமர் மகிழ வுவனரங்
கேற்றினன் வாழி

மெய்கண்டான்யாண்டு 704
கொல்லம்யாண்டு 1103
ஆவணித்திங்கள் 22-ம்நாள்

இங்ஙனம்
ஆ. குத்தாலலிங்கம் பிள்ளை,
முரப்பை.

உ

விநாயகர் துணை.

ஸ்ரீவைகுண்டந் தாலூகா வல்லநாடு கஸ்பா
கலியாணசுந்தரம்பிள்ளை யவர்கள் குமாரர்
க. ஷண்முகசுந்தரம்பிள்ளையால்
இயற்றப்பட்டது.

சிறப்புப்பாயிரம்.

கட்டளைக்கலித்துறை.

1. பூவினிற் றோன்றினரின்னமுந் தோற்றுப்புனிதமதை
நாவினிற் கூறுந்தமிழ் மாமறையினை நாடி நிதங்
காவினிற் கோகிலங் கூவுமாறுந்தையைக் காதலித்தே
தேவினிற்றே வாாயுற்ற நற்சற்குருச் சீர்த்தியையே

2. அன்னகருள்ள வரியாவரும் பாவாலறைதியெனச்
சொன்ன சொற்கேளாத் துதியெனக்கொண்டு தொகுத்
[துரைத்தன
மன்னவை மெச்சிட முத்தமிழ் சொற்றிடுமாட்சியுளா
னென்னரு நண்பன் முரம்பையின் மேவியிருப்பவனே

3. செப்பு திரைக்கோத்திரத்தவரியாவருஞ்செய்தவத்தா
லப்புவி மாறைப் பதியருளுஞ்சல வாண்டகைக்கு
தம்பெரு வாழ்வெனத் தோன்றினன் பூவினிற்
[சண்முகனே
மெய்பெருமான் கழலென்று மே மாறுவியல் பினனே

4. வேடுவனாகியே வில்லினை யேந்திமா வேட்டைதனை
நாடுவன் காளத்தி நம்பர் பொற்பாதத்தை நண்ணியவே
கூடுவன் கண்ணிடந்தப்பிய தொண்டன் குரைகழலே
தேடுவனே செண்பகக் குமாரப் பெயர்க்கொள்ளியனே

5. சாற்றரியார் புகழ் சாற்றினனே வருஞ்சார்ந்து குருப்[பர
போற்றிடும் வண்ணம் புகன்றவன் றன்னொடு புண்ணிய
மாற்றலைக்கொண்ட மாருந்தை யினன்ப ரடியவரும்
மாற்றுயரின் னூன்மதிப் பவரானினம் வாழியவே

மெய்கண்டான்யாண்டு 704
கொல்லம் 1103 ஆவணித்
திங்கள் 30-ம் நாள்.

க. ஷண்முகசுந்தரம் பிள்ளை,
தமிழ் பண்டிதர், வல்லநாடு.

உ

கணபதி துணை.

ஸ்ரீவைகுண்டம் தாலூகா முரப்பையிலும் இராமநாதபுரம் ஜில்லா காருடிகோத்தான் பெரியகோவில் அக்கிரகாரத்திலும் வசிப்பவருமாகிய ஆதி சைவகுல சிவமறையவரான

ப. கைலாசப்பட்டரவர்களால்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

இருபத்தொரு சீர்கழில் நெடில் ஆசிரிய விருத்தம்.

1. சீர்மருவு பாண்டியிற் காரைக்குடிப் புதூர்
சிறந்தபதி வணிகர் மாயிற்
சீரன் முத் தயசெட்டி சேபெனும் மொருகுரிசிற்
றிருமுறைத் தலங்க டொழுது
திருச்செந்தி லாதிப னருண்ஞான உபதேசத்
திறத்திறற் றுறந்து வந்து

2. நீர்மருவு செஞ்சடிலர் நெல்வேலி குடதிசை
நித்தர் திரி கூடம் நண்ணி
நேர்சாலை கூடிவரு வழிமார்க்க மாருந்தை
நீணகரில் வந்த மர்ந்து
நிமலனடி யவருயத் தமிழ் மறைகணட்டியே
நிலவு சற் குருநா தனைப்

3. பேர் மருவு பெரியர் தாம் வாழ்ந்திருந்த சமாதியே
பெற்று வவர் முனமுரைத்த
பிழையிலா வரலாற் றிணையடியர் வரைந்ததை
பேணியந் நகரி லன்பன்
பெருகுமஞ் சினைகாத்த குலச்செம்புதிலரக்கோத்ர
ப்ரதாப வரு ஞ்சலன் சேய்

4. ஏர்மருவு முரம்பையில் வாழ்செண்பகக்குமர
னென்னண்ப னிடமீய்ந்துமே
யெழின் மருவு பாவினாற் செய்கவென வவர்வேண்ட
வினையிலார் சரித மதனை
யியற்றினன் காவிய மது ததும்பிடவடியர்க்
கென்று மமுதாய் வாழ்கவே

மெய்கண்டான் யாண்டு 704
கொல்லம் 1103 புரட்டாசி
திங்கள் 25-ம் நாள்

இங்ஙனம்
ப. கைலாசபட்டர்,
முரம்பை, காருடிகாத்தான்,
பெரியகோவில் அக்கிரகாரம்.

ஸ்ரீவைகுண்டந் தாலூகா வல்லநாடு கஸ்பா
நல்லகுற்றாலஞ்செட்டியார் அவர்கள் குமாரர்
ந. வேலாயுதஞ்செட்டியாரவர்களால்
இயற்றப்பட்டது.

சிறப்புப்பாயிரம்.

கலிவிருத்தம்.

சீராரு மாரூந்தைத் தேசிகன்றன் நற்கதையை
ஆராமஞ்சூழ் முரம்பை யண்ணல் செண்பகக் குமரன்
தாரார்ரி தழிமதித் தண்சடிலன் றன்னடியார்
நேராகவந்தியற்றி நிரூபினன்காண் வாழியவே

மெய்கண்டான்யாண்டு 704
1103மாண்டு ஆவணித்
திங்கள் 30நாள்

இங்ஙனம்
ந. வேலாயுதஞ்செட்டி,
வல்லநாடு.

உ

கணபதி துணை.

ஸ்ரீவைகுண்டந் தாலூகா ராமாநுசப்புதூர் உபாத்தியாயர்
உயர் திருவாளர் சிவசுப்பிரமணியபிள்ளை யவர்களின்
சேய் சிவஞானம் பிள்ளை யவர்களின் குமாரரும்
திருச்செந்தூர்த் தாலூகா புளியங்குளம்
போர்டு பாடசாலை தலைமை யாசிரியருமான

சிவசுப்பிரமணியபிள்ளையவர்களால்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

1. சுனைவாசத் தண்டலையிற் சுரும்புதேன் மிகவுகுக்கத்
[தூயபானல்
நனைவாளை வாய்மடுப்ப வான்றோயு முரப்பைகநர் நன்
[னோன்பாலே
புனைமேவு மாறுந்தைச் செப்புதிரைக் கோத்திரத்தில்
[புகழுமன்னோர்
இனையாரு மருணசலத் தெழில்வேள் இடத்துதித்த
[இன்பர்கோமான்

2. பதமிலகு வெனதுபிதா மகற்குமா ணாக்கர்களிற்
[பண்பின்மிக்கார்
நிதமிலகு வளத்துடைய செண்பகக் குமாரகவி நேர்மை
[யோங்க
இதமுடைய மாறுந்தை எழில்நகரா ரர்வமதற்கிசைந்து
[வாதல்
சிதமுடைய மாமுனிபின் வரலாற்றி னறவமதைச் சிந்தை
[ஓர்ந்தேன்

3\. செந்தமிழின் கடல்தெளிந்து கவிமணியைச்
[சேர்த்தல் வெகு செம்மை செம்மை
மூந்த முனி புங்கூட விதுகேட்டு முத்தென்பான்
[முத்தர் நாடும்
எந்தனினி திதபமதி னுனகுரிசில் நந்நூலுமிலங்கியோங்க
வந்தனைசெய் தற்குறிய மாமுனிவர் திருவடியும் வாழ்க
[மாதோ

மெய்கண்டான்யாண்டு 704
கொல்லம்யாண்டு 1103
ஐப்பசித்திங்கள் 4ம்நாள்
புளியங்குளம்

இங்ஙனம்
சிவசுப்பிரமணியபிள்ளை,
போர்டுப்பாடசாலை,
தலைமையாசிரியர்.

உ

கணபதி துணை.

ஸ்ரீவைகுண்டம தாலூகா வல்லநாடு போர்டயமெலி
மெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்
சி. வீரலெக்ஷுமிநாத பிள்ளையால்
இயற்றிய சாற்றுக்கவி.

(கொச்சகம்)

சீர்பூத்த வருணாசலப் பெரியோன் செய்தவச்சேய்
கார்பூத்த செண்பகக்குமாரனெனு நற்கவிஞன்
ஏர்பூத்த மாறூந்தைப் பதியிலெழுந்தருள் யோகப்
பேர்பூத்தார் சரிதமதைப் பேசினன் பார் பெரிதுயவே

மெய்கண்டான்யாண்டு 705
ஐப்பசித்திங்கள் 16-ம் நாள்
வல்லநாடு.

இங்ஙனம்
சீ. வீரலெக்ஷுமிநாத
பிள்ளை,
உபாத்தியாயர்.

உ

கடவுள் துணை.

ஸ்ரீவைகுண்டந் தாலூகா இறும் ஆழியாநகரில் வசிக்கும்

திருக்குறள் புலமை

ஸ்ரீமத் சோலைமலை அய்யங்காரவர்கள்

அருளிச்செய்த

கட்டளைக் கலித்துறை.

1. மறந்தரு சிந்தைமா ளுர்கண் மயக்கற்று மாதவரா
யறந்தரு சிந்தையர் வாழ்உறு மாறையதிலடைந்த
சிறந்தவர் காதையைப் பாவாகச் சொற்றனன் றென்
றிறந்தரு நண்பன்செண—பகக் [முரம்பைத்
குமாரென்னும் சீர்த்தியனே

2. நன்னல மார்தரு மாதவன் காதையை நானுணர்ந்தேன்
சொன்னல மார்தரு முக்கனிமேலாம் சுவையுளதே
அன்னல மோர்ந்த பெரியார் தளியுமழகுபெற
மன்னுமா மாருந்தையில் வாழ்பவ ரென்றென்றும்
[வாழியவே

மெய்கண்டான்யாண்டு 105
ஐப்பிசித்திங்கள் 20ம் நாள்
ஆழிகுடி யென்னும்
திருவாழிமாநகர்

சோலைமலை அய்யங்கார்,
டிறையூறுபீசர்,
திருக்குறள்புலமை.

உ

கடவுள் துணை.

ஸ்ரீவைகுண்டம் தாலூகா இனாம் திருவாழிமாநகரில்
வசிக்கும் ஸ்ரீராமாயணப் புலமை ஸ்ரீமத்
ராமய்யங்காரவர்கள்
அருளிச்செய்த

சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழில் நெடில் ஆசிரியம்.

1. திருவளர்மா றுந்தையிற்சற் குருநாதன்
எனும் பெரியார் சீர்த்திக்காதை
யுருவளர்மா முகில்காத்த குலச்செப்பு திரைக்கோத்ரத்
துதித்தன்பாக
பெருவளமப் பதியருணா சலம்செய்செண் பகக்குமரன்
பெற்றிவாய்ந்த
தருவளமார் முரம்பையில்வாழ் எனது நண்பன்
பாச்சுதையா ச்சாற்றினனே

2. நன்னலமா ரமுதொக்கும் நூன்முழுதும் யானுணர்
ந்தேன் நன்று நன்று
பின்னல்சடை யானடியார் சொற்றமிழ்மா மறை
யதனிற் பிறங்கலாலே
யன்னதன்றன் மகிமையினை யெடுத்துரைப்ப
தேவரானு மரிதேயாகும்
மன்னுமின்னூற் சொற்கனிவும் வானமுதத் தேனுஞ்
சேர் மதுரமாமே

கட்டளைக்கலித்துறை

3. பூமலிஞ்சடை யானடியார் சொற்பொழிந்திலங்கும்
பாமலி யுந்தமிழ் மாமறை முந்நாற் பனுவலென்னும்
நாமலி யும்படி யேசொலி மாறை நகர்வதியுந்
தேமலியும் பெரியார் தனிவாழி சிறந்திடவே

4. சொல்லற் கரியார் கதைதனை நூலாத்தொகுத்துரைத்த
வல்லக்கவிஞனு மந்நாலநகர் வாழ்பவரும்
நல்லப்பெரியார் தனிபணி பூசை நடாத்தெவரும்
அல்லற் பவமற் றோங்கியிம் பாதிலத் தாள்பவரே

மெய்கண்டான்யாண்டு 705
ஐப்பிசித்திங்கள் 20ம் நாள்
ஆழிகுடியென்னும்
திருவாழிமாநகரம்

இங்ஙனம்
ராமய்யங்கார்,
ஸ்ரீமத் ராமாயணப் புலமை.

உ

கணபதி துணை.

திருநெல்வேலி பென்ஷன் சப் ரிஜிஸ்டார் உயர்திருவாளர்

ஆர். எஸ். சுப்பிரமணியபிள்ளை யவர்கள்

இயற்றியது.

1. செட்டியப்பன் சீர்புனைந்த செட்டிமுனிவன்சேர
அட்டசெல்வம் மாறுந்தைக் கண்ணினைதைச் சிட்டருய
மண்பதையில் யாராலும் மாற்றொண்ணப் பாப்பொழியெந்
செண்பகக்கு மாரவேள் சீர்

வேறு.

2. சீருந் தனையுஞ் சிதையாது பாச்சொலுஞ் சீரதுகண்
டாரும் வியக்க வறியா தறிந்தது வாக்கினதை
யோரும் பரிசிற் றிருவரு ளுள்ளிருந் தூட்டலுமே
யாரு மறியா தறிந்தவர் போற்சொலு மற்புதமே

வேறு

3. அற்புத மிதன்மே லுண்டோ வாக்கியோரன் பேரிற்கேற்ப
நற்பதமாறு கொண்ட நாலும்பூ னைக்கு மெட்டாச்
சொற்பதங் கடந்த நாலுஞ் சூட்டு செண்பகமே போல
புற்பதம்தழைந்த தேனும் போற்றுவர் புலவோரே

4. போற்றலு மென்கொ லென்னப் பொழிதிகழ் முறியென் [மேனி
ஆற்றலோ டுமை யணைக்க வானதோர் தழும்பு முன்பின்
எற்றலோ டொருவன் கல்லு மேற்பதற் கிசைந்த தென்றுற்
போற்றுவர் புலவ ரெல்லாம் புண்ணியன் சரிதமென்றே

5. புண்ணியன் சரிதந் தன்னிற் புகுந்தது குற்றமேனு
மெண்ணுறார் பெரியோ ரென்று லிகழ்வரோ இழுதை [யோர்கள்
பண்பெனும் பாசத்தாலே பண்ணவ னுணர்த் தியதே [ன்றே
திண்பெறத் தேற்றுவார்கள் தெளிந்துளோர் தேறுவாறே

மெய்கண்டாணுண்டு 705 ஐப்பிசித்திங்கள் 22ம்நாள்

ஆர். எஸ். சுப்பிரமணிய பிள்ளை,
பென்ஷன் சப்ரிஜிஸ்டர்,
திருநெல்வேலி.

உ

கணபதி துணை.

மதுரை ஜில்லா பெரியகுளந் தாலூகா சிலவாரூர் காளையார்
கோவில் திருவாசக ஓதுவார் காமாட்சிபிள்ளை குமாறர்
சண்முகம் பிள்ளை யவர்களால்
இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

அறுசீர்கழில் ஆசிரியம்

சீர்புகழு மாறுந்தை சிவயோக சற்
குருவின் சிறந்த காதை
பேர்புகழுங்கார் காத்த மரபினன் சென்
பகக்குமரன் பெற்றியாக
பார்புகழும்படி பாடி உலகுய்யச்
செய்ததவப்பயன் தானென்னே
ஆர்புகழுஞ் சிவபெருமான் றிருவருள்
பெற்றோனென்றே
உரைசெய்தேனே

மெய்கண்டான் ஆண்டு 705
கொல்லம் 1103
சிலவார்நகரம்

இங்ஙனம்
கா. ஷண்முகம்பிள்ளை,

உ

கணபதி துணை.

சிதம்பரம் சிவஞான திருத்தளி

ஸ்ரீமது சிதம்பரசுவாமியவர்களால்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

அகவற்பா.

செண்பகக் குமாரத் தென்மொழிக்கவிஞன்
சற்குருநாத சரித புராணிகன்
சற்குருநாத சரித மதுதனை
பெற்கெடுத்தோதியிற் புறத்தேற்றின
இன்னரிவரூர் இது யாருந்தை
யின்ன தனருத்த மதுமால் தந்தை
யென்னின தனுயர் பெடுத்தோத லெல்லாச்
சொன்ன குருவியல் சொன்ன புராண
நன்னருரைநாவா யிரத்தையா
தலைதலைதென்றிடின் அமரருளரனும்
பலைருல் குரவருட் பரம குரவனு
மொப்புயர்வின்றி யுயர்ந்தனனென்றே
யப்படியிதுவும தியமற்றென் னெனின்
குமரன்றந்தை குருவிம் மூவரை
யெமதறிவதனு னெடுத்தோ தலேலா
தத்தனி னிலைநித் துணையின மைகுதும்
மாருந்தை வாழ்க வச்சற்குரு
வெல்க புராணிகன் மரபோங்க வென்றுமே

1103-ம் ஞ
மார்கழிமீ 23உ

இங்ஙனம்.
மெய்கண்ட தோருரை புகமாணாக்கன்
சிவஞானத்திருத்தளி,
சிதம்பரம்.

உ

சிவசண்முகன் றுணை.

சிதம்பரந்தாலூகா நகராமலை திருவாளர்

நா. இராமலிங்கம் பிள்ளை யவர்கள்

இயற்றிய சாற்றுக்கவி.

1. நிலம்பரவுந் தமிழ்நாட்டிற் பலவளனுங்
குறையாது நிலவு கின்ற
நலம்பரவு மாருந்தை யெனும்பதியிற்
கார்காத்த நயத்தின் மிக்க
புலம்பரவு மரபினிடை பூத்தவரு
ணாசலத்தின் புதல்வனைய
பலம்பரவுஞ் சைவமுணர் செண்பகக்கு
மாரனெனும் பண்பின் மிக்கான்.

2. எத்தலத்தும் வாணிபத்தாற் பொருளீட்டி
யறன்பணியே யியற்றுகின்ற
வுத்தமநற் குலத்துதித்த சற்குருநா
தன் சரிதை யுலகி னுள்ளோர்
சித்தத்தே தெளிந்துய்ய வினியதமிழ்ப்
பாவதனாற் சிறக்கச் செய்து
பத்தியொடு புகழ்கொண்டா னிந்நிலத்தி
லிவன்போல் யார் பகரு வீரே.

நா. இராமலிங்கப்பிள்ளை.

நகராமலை.

உ

சிவமயம்

இராமநாதபுரம் சிவகங்கை என்னும் உபய சமஸ்தான வித்துவானும் சிலேடைப்புலியுமான வேம்பத்தூர் பிரம்மஸ்ரீ பிச்சுக் கவிராஜரவர்கள் சிஷ்யர்களில் ஒருவரான பிரம்மஸ்ரீ

சங்கரசுப்பா சாஸ்திரியாரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

1. சீர்மேவுகதிர் நவமணித்திரள் கொழிக்கும றி
திரைகடலுடுத்த பாரி ல்
திகழுளகை பொத்த காரைக்குடிப் புதுநகரி ற்
செல்வமிகு வணிகனாக ச்
செனித்து சிலகாலங் கழித்தபின் க்ஷேத்ரயா த
திரைமுறையதாய் முடித்து ச்
செந்தில் வளர் பன்னிரு புயாசலத் தறுமுக ச்
செம்மல்மாக் கருணைபதனை ல

2. ஏர்மேவுமைந்தர் செம்பொன் வனிதை யென்றுபக ர்
ஈடணைகள் மூன்று நீக் கி
இணையின் மெய்த்துற வடைந்தன்மை ஞானத்தனை ய்
எய்துமடியார் தமக்கி ங்
கிதைய மகிழச் செந்தமிழ் மறைகளுடொரு ம
இயப்பி மாருந்தை பூரி ல்
ஏதமில் சமாதியி னிலினிதயர்ந் தானகில ம
எத்து சற்குருநாதன் மே ல்

3. கார்மேவு பைம்பொழின் முரப்பை யப்பதியில்கா ர்
காத்தகுல மணிதன் மேலாய் க்
கவினுறுஞ் செய்பு திரையாய கோத்திர மருவு க்
கன்ய வருணாசலன் செ ப்
கருசருதவப்பயனதா யுதித்தோ றமிழ் க்
கவிஞர் புகழும் வித்வ சி
காமணியெழிற் செண்பகக்குமாரனு நீக ன்
கனிவுடன் காய்ந்துரைத் க

4. பேர்மேவு திவ்விய சரித்திரத்தின் சுவை ப்
பெருக்கையனுபவிக்கின் வாறே ர்
பெருவருத்தத்தினாலன்று கிராத்தியி ற்
பிறந்தவாரமுத்தையாரு ம்
பிரியம் வையாதருவருத் திகழ்வரென ப்
பேசுவேன்றிடமதாக ப்
பிறங்குமிந்நூலிந்து பானுவுலகுள்ளவ ரை
பீடுற்று வாழ்கமா தோ

சங்கரசுப்பாசாஸ்திரி,

உ

கணபதி துணை.

மாறாந்தை சற்குருநாத சுவாமியின்
சீடர்களில் ஒருவரும், ஷைநகர் வாசியும் வெள்ளகால்
சைவத் திருவாளர் குற்றாலலிங்க முதலியாரவர்கள்
குமாரருமான பரமசிவன் முதலியாரால் இயற்றிய

உரிமை சாற்றுக்கவி.

அறுசீர் ஆசிரியம்.

1 சீர்மருவு மதிக்குடைக்கீழ்க் கன்னியர சாண்டென்றும்
சிவமே யாளும்
ஏர்மருவு வளத்துடனே யியற்புலவர் வதிநலமு மெழி
லார்ந் தென்றும்
கார்மருவு பொழிலுடுத்துக் கமழ்தீர்த்தம் நிறைபொருந்
தக் கரையும் வைகை
நீர்மருவு சிறப்புடைத்தாய் நிலவளனும் நிதிவளஞ்சேர்
நிப்பநாட்டில்

2 என்றென்றும் வாணிபத்தார் பொருளீட்டித் திருப்ப
ணிக்கே யியைந்து சொர்ணக்
குன்றென்ன நிதிகுவிக்குங் குலவணிகர் வாழ்காரைக்
குடிபுதூரில்

நன்றென்றுஞ் செய்நகர குலத்திலொரு பாநுவென நாமு
முய்ய
மன்றென்றும் நடிப்பவன்றன் றிருவருளை யொருவுருவாய்
வந்துதித்து

3 பன்னுகலை வளம்நிறைந்து பசுபதிபா சப்பநுவல் பலவுந்
தேர்ந்து
உன்னுதிரு முறையாதி யுணர்ந்துமெஞ் ஞானவறி வுற்று
நால்வர்
சொன்னதிரு முறைத்தலங்க டொழுதுசெந்தி வந்த
டைந்து தூய ஞானி
மன்னியசீர் மாறுந்தை வளம்பெருகப் பாகநியின் மன்னி
னாரால்

4 இப்பெரியார் சரிதமுன மவர்சொலவன் பர்கள் வரைந்து
விதனைப் பாவாற்
செப்பனவே முரப்பைவதி செண்பகக்கு மாரனிடஞ்
சேர்க்க வன்னேன்
ஒப்பொருவ ரிலார் சரித முரைப்பதெவ னெனவைய
முளத்துற் றுனும்
அப்பெரியா ரருளேட்ட விருசதப்பன் றெருட்டாவா லாக்கி
னேனே

5 முன்னமுமிச் சற்குருநா தன்பணியான் செய்துய்ந்த
முறையி னாலே
அன்னவனே தியபடியே வரைந்ததைநூ லாக்கினதை
யானுணர்ந்தேன்
சொன்னலமும் நன்னலமே சுவையிதன்மேல் வேறுண்
டோ தூய நூலின்
தன்னலமோர்ந் தியற்புலவர் சாற்றுறைத்தார் திருநாமஞ்
சாற்று வேனே

எண்சீர் ஆசிரியம்.

6 இத்தரையின் முரம்பைபடா லயத்தின் மன்னி
யிலங்குஞ்சுப் பிரமணியே சிகனு ரென்றுஞ்
சித்தரடி பரவுகுற் றால லிங்கம் சிவமறையோன் கயிலாய
நம்பி வல்லை
உத்தமசங் கரசுப்பா சாஸ்திரி யென்று முயர்ந்ததமிழ்
மறைபயில்வே லாயுதப் பேர்
வித்தைமிகு சண்முகசுந் தரக்க விஞன் விரலக்குமி
நாதனெனும் விழுமி யோனே

7 பொங்கர்சூ ழாழிநகர் தன்னி லென்றும் போற்றுமிரா
மாயணத்தின் புலமை மிக்க
துங்கமிகு வைணவசீ இராமசுவாமி சோலைமலை குறட்
புலமைத் தூயோ னென்றும்
மங்குறோய் புளியநக ருபாத்தி யாயர் வரகவிஞன் சிவசுப்ர
மணியன் வான்றோய்
தெங்குநிறை பொழிற்சில வாரூர் வாழுந் திருவா சகம்
புகல்சண் முகச்சேய் மன்னே

8 மெய்கண்ட தேவருரை முகமா ணாக்கன் விளங்குசிற்
றம்பலத்தே வீற்று நிற்கு
மைகண்டார் திருவடியே மனத்துட் கொண்டு மன்னுசிவ
ஞானதிருத் தளிபை பென்றுங்
கைகண்டங் கமர்ந்துசெப் பறையும் போற்றுங் கவிப்
புலமை சிதம்பரமா முனிவ னோங்குஞ்
செய்கொண்ட. திருநகரா மலையில் வாழுஞ் சித்திரகவி
யிராமலிங்கத் திருநாமன்னே

அறுசீர் ஆசிரியம்.

9 என்றும் வளஞ்சேர் ராசைநெல்லை யிலங்கி வதிகார் காத்த
குலங்
குன்று தாரேஸ் சுப்ரமண்யன் கோதில் ராபிசேதுவெனும்
நன்றாய் மூவைந் தியற்புலவர் நாலு முறைக்கும் வல்லுநர்
கள்
ஒன்றி யின்னூ லுணர்ந்துமுக வுரையுஞ் சிறப்பு முறைத்
தனரே

10 இத்தகைசற் குருநாதன் சரிதமமு திசைத்தேனை
யென்றும் நீங்கா
பத்திமையுட் கொண்டருந்தி பதியனைய பட்டியில்வாழ்
பாரி யொப்பான்
சித்தமகிழ் குணன்சிமு சின்னய்யா செட்டி சிறந்தநிதி
யுதவியுயிர்க் குயிராநிற்கும்
உத்தமன்சேய் கணேசனச்சி லேறியிந்த உலகமெலாம்
பரவிடவே உலாவிற்றன்றே

11 வேத முடியார் திருவருளால் விரித்து யெடுத்துக்கூறியதில்
எதந் தவிர்த்துப் பெரியார்க ளிகழா ரிழுதையேன் சொல்லையும்
ஓத வறியே னியற்புலவர்க் குழூவலன்பார் பரம சிவன்
சீத வதனக் குருதாளே சிந்தித் துய்யுஞ் சிறியேனே

மெய்கண்டான் ஆண்டு 706
கொல்லம் ஆண்டு 1104
ஐப்பிசித்திங்கள் 15-ம்நாள்
விபவ வருடம்

இங்ஙனம்.
வெ. கு. பரமசிவன்,
மாறாந்தை.
தென்காசித்தாலூகா,

உ

கணபதி துணை.

சிவமயம்.

மாருந்தை நகரின்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய
சர்வோத்ம சிகாமணி சற்குருநாத சுவாமிகள்

சரித்திரம்.

விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

வானநீர் மதியிதழிச் சடிலநாயகனே மன
மலரில் வைத்த
சானநிலை முத்திபெறு தற்குவழி யெனவடியார்
தமக்குச் சாற்றும்
ஞானகுரு வாகியசற் குருநாதன் சரித்திரத்தை
நவில்வ தற்குத்
தேனலர்பூந் தார்சடிலன் மாறையிற்செண் பகக்களி
ற்றை சிந்தை செய்வாம்

வாழ்த்து

மின்னும் மாமழை பொழிந்துமே தினிவளம்பெருக
வுன்னு தானைசேர் மன்னர்செங் கோன்முறை யொழுக
மன்னு மாமறை யாகமச் சைவமும் வளர்க
பின்னுசெஞ்சடைப் பிரான்றிரு வருள் பெருகிடவே

நூற்பயன்

செஞ்சடை யண்ணலே திருவுருவாகத் தோன்றி
மஞ்சுறை சிகரமோங்கி மன்னுமாருந்தை தன்னில்
விஞ்சைக ளடியார்க் கீந்த மெய்க்குரு சரிதங்கேட்போர்
பஞ்சின்மெல் லடியாள் பாகன் பாதமே பொருந்தி
வாழ்வார்

பாசிவம்

பொன்னமர் மருமத் தானும் பூவுறை தேவும் நாக
மின்னமர் பாகங்கொண்ட மேலவன் றானு மாகி
மன்னுமுத் தொழி னடாத்தி வளர்பெருஞ் சோதியாக
வென்னகந் தனிலு யார்ந்தோ னெவனவ னெமையுங்
காப்பான்

கயிலாசநாதர்

இந்துநீ ரிதழிபணி செஞ்சடையோன் றிருப்பாத மிதயத்
துன்னி
கொந்துகுழ லார்மயர்வைக் குமைத்தகுரு வின்சரிதங்
கூறுதற்கு
நந்துகரன் மலரயனுந் தேடரிய தனியுருவாய் ஞாலமுய்ய
வந்தருளு மாறுந்தைக் கயிலாச நாதர்பதம் வணக்கஞ்
செய்வாம்

ஆவுடையநாயகி

ஷை

ஆடகமே ருச்சிலையா ளருளுருவே திருவுருவா யடைந்துகன்ம
நாடகமா மலங்களையும் ஞானசற்குருசரிதம் ஞாலத்தோத
சூடக்கை மதிவதனந் தூயவெழில் புன்முறுவ றுகளில்வேத
பாடசுரா புரமிலகு மாவுடைநா யகிபாதம் பணிதல் செய்வாம்

நடராஜமூர்த்தி

கலிவிருத்தம்

கல்லையினிற் றளிர்கொய்யாக் கருத்துமலர் கொடுபரவி
யல்லலறுத் தாண்டகுரு வரியசரி தப்புகல
தில்லைவளர் பணிமன்றுட் டிருமறையோர் தொழுதேத்த
வெல்லையிலா நடம்புரிவோ னிணையடிக டொழுதுய்வாம்

சிவகாமி அம்மை

பவமறுக்குந் தனிமுதலின் பதுமபத மேகருதி
தவமியற்று மவர்க்கருள்சற் குருசரிதஞ் சாற்றுதற்கு
வவமறுத்த புலிபணிக்கு வருள்காட்டு மம்பலத்தே
சிவமருவு சிவகாமி சுந்தரிசெந் தாள்போற்றி

தெட்சணாமூர்த்தி

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொல்லாதபுரமட்ட சேவகன்றன் சரணமலரைப் பொருந்திஞானச்
சொல்லார்ந்த சுவையுண்ட சற்குருநா தன்சரிதஞ் சொல்வதற்கு
நல்லார்க ளானநவிலுஞ் சனகர்முத லால்வர்க்கு நால்வே தங்கள்
கல்லாற்கீ ழிருந்துரைத்த ஞானதேசிகன் பாதங் கருத்துட் சேர்ப்பாம்

மகாகணபதி

கலிவிருத்தம்

பந்தமில்குரு பகர்ந்தமெய் வாசகப் படியே
சிந்தையன்பொடு சீடர்கண் டெழுதிய வாறே
யந்தமா ன்மியந் தெரிந்தவா றமைத்திடப் பணிவா
மெந்தையா மகாகணபதி யிணையடி தொழுதேன்

சுப்பிரமணியர்

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

முத்தார மணிந்ததிரு வானைக்கா வெனும்பதியின் முளைத்து நின்ற
கத்தாவை யனுதினமும் போற்றிடுசற் குருசரிதங் கழறுதற்கு
கொத்தாரும் வெட்சிமலர் புனைந்துபகைச் சூர்தடிந்து குன்றம் நின்ற
வித்தார மயிலானை விளங்குவேற் படையானை விழைந்து வாழ்வாம்

சரசுபதி

வேறு

உலகறியத் தவமியற்றி யுருவிலிபால் வருமயர்வை போலச்
செய்து

பலகலையு மாராய்ந்து பரனையிரு தயமலரிற் பரிந்து போற்றி
யலகிலரு ளடியர்தமக் காமருள்செய் யருட்குருவின் சரிதஞ்
சொல்ல

சலசமலர் மிசையமருஞ் சகலகலா வல்லிதனைச் சார்ந்தே
னம்பா

திருநந்திதேவர்

கலிவிருத்தம்

கந்தவே டன்க ருணைபெ றுந்திறன்
சிந்தைசெய் குருவின் றிறஞ் செப்பற்கு
வந்தமா தியிலா னணி வாயில்வாழ்
நந்தி யெம்பெரு மானடி நண்ணுவாம்

நால்வர் நாயன்மார்

அறுசீர்க்கழில் நெடில்

சிவனடியே சிந்தைசெயுந் தேசிகனார் தன்சரிதந் தெரிந்து
சொல்லப்

பவனருளா லுமையுவந்து பாலளிக்கத் திருப்பதிகம் பாடி
னோனு

மவனடியா ருடன்சிவிகை யடிதாங்கு நாவரசு மன்பா லியா
ர்க்கு

முவமையிலா வாரூரன் றிருவாத வூரனையு முன்னி வாழ்வாம்

அறுபத்துமூன்று நாயன்மார்கள்

வேறு

வண்டமரும் பூங்குழலா ளொருபாகந் தரித்தவனை மனதினுன்
[னிக்

கொண்டரிய தவம்புரிந்த குருநாதன் றன்சரிதங் கூறுதற்கு
முண்டகமே லிருந்தவனும் பாம்பணையிற் றுயின்றவனு முன்கா
[ணாத
வண்டர்பிரா னடியடைந்த வறுபத்து மூவர்பத மகத்துள் வைப்
[பாம்

கண்ணப்பநாயனார்

எழுசீர்க்கழி நெடிலா சிரியவிருத்தம்.

அருட்டிரு வுருவா யிவணெழுந்தருளு மரியசற் குருசரி தத்
[தைப்
பொருட்டிறந் தெரிந்து விரித்துரை செய்யப் புகலுமென் முக
[ரிமைதா ய்ந்தார்கண்
மருட்டிறம் புகாது தடுத்துவாட் கொள்ளு மன்னுசீ காளத்தி
[யார்க்கு
வுருட்டியூ னமுத மளித்துக்கண் ணப்பு முத்தமன் சீரடி பணி
[வாம

சேக்கிழார் நாயனார்

அறுசீர்க்கழி நெடிலா சிரியவிருத்தம்

ஆர்த்தார் தரித்த வளவர்பிரா னறியா தெடுத்த புறநூல்பின்
பார்த்தா தரிக்கா விதஞ்செய்து பரத்து மிகத்தும் பயன்பெறவே
யோர்த்தா ரிதழி யணிந்தசடை யிறைவ னடியார் தஞ்சரிதஞ்
சீர்த்தா ரணிமேயா ருயச்செய்த சேக்கி ழார்தம் மடிபோற்றி

சற்குருநாதன்

ஷை

சீருலவு நெல்லைகுட திசைநிகழ்மா ருன்னூயினிற் சேர்ந்துவந்து
பேருலவு மடியர்க ளிதயகுகே சயமலரிற் பிறங்கவென்று
மேருலவு திருமுறைக டிருத்தொண்டர் புராணமெனுமிசைத்தே
[னூட்டும்
காருலவு நன்குருசற் குருநாதன் னளினபதம் நண்ணி வாழ்வாம்

மெய்கண்டதேவர்

எண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

மைவளர்சீ கண்டனது ஆணைதாங்கி வள்கயிலைத் திருநந்தி மரபில் வந்த
மெய்வளர்மா சைவமெனும் பைங்கூழோங்க விளங்குதமிழ்க் கொண்டலெனவெண்ணெய்த் தோன்றி
பைவளர்நல் லரவணிந்தோ னடியாருய்யப் பன்னுசிவ ஞானபோதத்தைத் தந்த
தெய்வவுரு வாய்மிளிரு மெய்கண் டான்றன் செய்யதிரு வடியிணையைச் சிரமேற் கொள்வாம்

குருபரம்பரை

ஷ.

எண்ணரிய தமிழ்மறையி னூர்கறவ மடியர்கட் கெடுத்தூட்டுங் குருசரித மிசைப்ப தற்கு
வண்ணல்கயி லாயபரம் பரையில் வெண்ணெய் யருட்பதியி லமர்மெய்ய னருள மைந்த
புண்ணியபஞ் சாக்கரனர் முதலாய்ப் பின்சார் புகலருமெய்க் குரவர்கடம் பொற்பு வாய்ந்த
வண்ணமலர்ப் பாதுகையைச் சிரமேற் கொண்டு மறவாது வகத்திருத்தி வணக்கஞ் செய்வாம

சிவஞானயோகிகள்

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

தித்திக்குந் திருமுறைகள் புகட்டுகுரு தன்சரிதந் தெரிந்து சொல்ல
முத்திக்குக் காரணமா பாடியத்தை நன்குபெற மொழிந்து ஞானச்
சித்திக்கு வித்தாகக் கோமுத்தி மடம்வதிந்து சிறப்பு வாய்ந்த
வெத்திக்கும் புகழெந்தை சிவஞான யோகிகடா ளெண்ணி வாழ வாம

உபதேசகுரு

ஷை

என்னிதய சினகரத்தி லெழுந்தகுருசரிதமியா னிசைத்த நூலை
நன்னிலைமை பெறச்செய்து நவைதீர்த்தான் கொமுத்தி
நகர் மடத்தி
னுன்னரிய குருமரபிற் பெரியபூ சை யுவப்புடன் செய்
துயர்ஞான பாநுவொப்ப
வின்னியன் முத்தமிழ்ப் பெருமான் முரம்பைவாழும்
என்குரு சுப்பிரமணிய னிணைத்தாள் போற்றி

வித்தியாகுரு

கட்டளைக்கலித்துறை

எழுத்தறி யாதுமுன் றேமாந்த காலத் தெனது பிதா
வழுத்திய சொற்படி வண்டமி ழீந்தும் வளர் கலைக
ளழுத்தியும் புன்னறி வாலுணா ராத வடிய னகந்
தழுத்திடப் போதித்த சுப்பிரமண்ய நற்றாள் தொழுவாம்

குலகுரு

அறுசீரடி விருத்தம்

வார்பெறுந் தனத்துக் கன்னி வழிநிம்பன் வலையுட்பட்ட
கார்பெறுந் தழையை நீக்கிக் கமழ்ந்தகார் காத்தாரென்று
சீர்பெறு நாம மந்தச் செழியனுற் கொடுக்கப்பெற்ற
வேர்பெறுங் குலம் புரக்கு மெழிற்குரு விணைத்தாள் போற்றி

நூல்செய்தற்குக் காரணம்

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

ஓதுந் திறத்துப் புலவர்கண்முன் னென்றுமறியா தொரு சிதடன்
வேத முறைப்பே னெனுந்தன்னை மெச்சுந் தறம்போ
னுளவெண்பா

றாத னுரைக்க வரைந்தமுறை நண்பன் வேலாயுதங் கொடுக்கக் காதலுடனேத் ததைக்கவியாக் கறைந்தே னுலகோர் கதிபெற வே

அவையடக்கம் எண்சீரக்கழிநெடில்

இலகுதமிழ் வளம்நிறைந்த புலவர் முன்னே பிழையெழுதத்
தெரியாத விளைய பாலன்
பலகலையும் நிறம்புமுறை யனைத்தும் நானே பரிவின்வரைந்
திடுவனெனும் பான்மை யொக்கு
முலகமெலா முய்வதற்கோ ருருவாய் வந்த வுயர்வான
குருநாதன் சரிதந்தன்னை
திலமளவும் புலமையிலாச் செயல்சேர் நாயேன
சிற்றறிவாற் செப்பநின்ற செய்கை மாதே

கலி விருத்தம்

மன்னுதமிழ் மறையெனவே வளங்குமீ ராறுமுறை
தன்னுளக்கோ யிலிற்பதித்த சற்குருநா தன்சரிதம்
பன்னுதிற மெற்குளதோ பகரறிய பேராசை
யென்னுளத்தின் மன்னியதா லெனையறியா திசைக்கின்றேன்
பொன்றுறு மிதழ்ச்சடில புண்ணியரே மாறுந்தை
யென்றுதை னருளேக்கா லிபம்பியவிச் சரிதமதிற்
சொன்றமை வமுதருந்தித் தொண்டனே னுய்யும்வணம்
நன்றுவின் வாழ்த்திடுவர் ஞானநோக் குற்றவரே

சற்குருநாதன் சரித்திரம்-

உ

கணபதிதுணை

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நூல்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

1 சீர்வளர்தா மரையானுந் திருமருவு மார்பானுந் திகழ்
கடுக்கைத்
தார்வளர்செஞ் சடையானுந் தந்திகந்தன் சலமகளுஞ்
சயில மாது
மேர்வளர்மா தவர்தேவ ரியக்கர்சித்தர் வந்துலவு மெழிலார்
சொர்ணப்
பார்வளர்மா மேருதெற்கிற் பரதகண்டந் தனிற்றமிழ்வாழ்
படியின் மீது

2 வான்மாறு மழைபொழிய மாறையா கமமொழியும்
வழியிற் சற்றுந்
தான்மாறு வகைநின்று கோல்செலுத்துந் தராபதியின்
றன்மைக்காக
கான்மாறி யிரசிதசபைக் கண்நடஞ்செய் பெருமானார்
கருணை யென்றுந்
தேன்மாறி பொழிமதுரைத் திருநகருஞ் சேர்ந்திலங்கு
செழியர் நாடு

3 அத்திருநாட் டுச்சிறப்பரியபரஞ் சோதியா ரறைந்தார
முன்னற்
நத்தியுணர்ந் தோர்களுக்கந் நாடுநகர் வளம்பெருமை
நன்கு தோன்று
முத்தமநற் றிருநாட்டி லீசான திசையதனி லொப்பிலாத
சித்தர்முத லானவர்கள் சேர்காரைக் குடிபுதூர் தேத்தின்
மாதோ

கொச்சகம்.

4 செப்புதிற நகரத்துச் செட்டிகுலந் தழைத்தோங்க
முப்பொருளும் நன்குணர் முத்தயசெட்டி முயறவத்தால்
வைப்பெனவே மாநிலத்தோர் மகிழ்ந்தினிது கொண்டாட
வொப்பரிய தவப்பெரியா ரொருவரவ தரித்தனரால்

5 ஆரணத்தோடாகமங்க ளரியதிரு முறையுணரும்
பூரணமா மதியுடைய புண்ணியராந் தந்தையர் தாம்
நாரணனே முதலாய தேவருக்கா நஞ்சுண்ட
காரணர்தங் கருணைமிகுங் கறுப்பனது பெயர்வைத்தார்

6 புண்ணியராந் தந்தையர்க்குப் புத்திரர்தாம்நால்வருண்முன்
னண்ணலா மக்குரிசி லணிவளர்மா மதிபோல
நண்ணிவளர் பொழுகின்கண் நற்கலைக டேறுதற்கு
எண்ணருநல் லோலைதனி லெழிற்பள்ளி யமர்வித்தார்

7 சிலநாளிற் கலைபயின்று சிலைமேரு தனைப்பிடித்தோன்
பலநாம மாயிரமும் பற்றுக்கோ டெனத்தெரிந்து
மலமாயை நீக்குமுதன் மலரடியே மறவாமல்
நலநாம மைந்தெழுத்தும் நாடோறுந் துதிசெய்வார்

8 வண்டார் குழலிமய மாதை யிடப்பாகங்
கொண்டார் கழல்பரவக் கோயிறிரு முன்றெய்தி
தண்டா ரிதழி தனிமுதற்குந் தையலெனுஞ்
செண்டாடு நாயகிக்குஞ் சேர்ப்பா ரிதயத்தால்

9 பூசலா ரென்னும் புகலரிய புண்ணியர்போற்
றேசா ரிதயச் சிவாலயத் தர்ச்சனைபுரிவர்
பாச மலமறுத்த பரனடியார்க் கொத்திறைஞ்சி
காசு துகிலன்னங் களிப்போ டளித்திடுவார்

10 தன்குடும்பத் துண்டான சவுளிக் கடைதனிலே
முன்கொடுத்துப் பின்வாங்கி முழுலாபம் பாராதே
வன்கொடுமை யானவிலை வாங்கா தவம்விலக்கிப்
புன்குடுமித் தேவனருள் போற்றிப் புகழ்ந்திடுவார்

11 சொல்லரிய தூசின்விலை சொல்போதுந் தூசறுத்தார்
நல்லறிவு வந்துதிப்ப ஞானப் பொருள்பகர்வார்
புல்லறிவாற் றம்பெருமான் புகழுரையார் தமைவெறுப்பார்
வல்லறிவு நன்மைகடைப் பிடியென்றே வாழ்த்தியுமே

12 இந்தவண மாக விவரொழுகும் நாளின்கண்
பந்தமிகு சுற்றத்தார் பரிவுடனே யவரிடத்து
வந்துலக வழக்கத்தின் வகைவதுவை நீர்செய்ய
சிந்தைசெய்தே மதற்கிசைந்து திருவுள்ளஞ் செப்புமென

13 மாயம் பெரிது மனைவாழ்க்கை யம்மம்மா
காயம் பெரிதல்ல கண்ணுகலான் றன்புகழை
வாயும் வழுத்தா மனநினையாக் கண்ணோக்கா
ராயம் பெரிதாகு மன்றோ வெனமறுத்தார்

14 தந்தையொடு தாயார் தனைச்சேர் பெருங்கிளைஞர்
வந்தவர்க ளெல்லா மனைவாழ்க்கை யல்லாதார்
முந்தை வினைகளைய மாட்டா ரெனமொழிய
வந்தமிலான் றன்கருணை யாமிதென வேநினைந்தார்

15 எம்பெருமா னோக்கமீ தானாற் சரியென்று
நம்பெருமா னருள்பெருகு நற்றவருஞ் சம்மதித்தார்
சம்புபுக ழகத்திற் சதாகாலங் கொண்டவர்க்கு
வம்பலருங் கோதை மகட்பேச வெத்தனித்தார்

16 நல்விதயஞ் சாரும் நகரத்தார் தங்குலத்திற்
சொல்லிய சொன்மாறுத் தூமனைபார்த் தாராய்ந்து
வல்லிக் கொடியிடையு மாமலரா னோக்குமுள
மெல்லிய லைத்தேடி விரைந்தழைத் துவந்தார்கள்

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

17 எந்தை பெருமா னருணோக்கா லிமைய மாது முலைசுரக்க
வந்து கொடுக்க ஞானமுண்ட மறையோன் காழி வள்ளல்

பத

மூந்து வினையோ தங்கடக்க முழுநா வாமென் றெக்காலுஞ்
சிந்தை செய்யுஞ் செயலாற்றுச் செய்தார் நன்கு திருமண
த்தை

18 நம்ப னருள்சேர் நற்றவர்க்கு நன்குமணஞ் செய் நாளின்
கண்
கும்ப முனிபோற் பருமறையோர் குழாங்க டமது குலத்
தவர்க்கும்
வம்பு கந்த முதலாக வளங்கு மடைக்காய் வெள்ளிலையு
மும்பர் வியப்பக் காசொடுநூ சுவந்தே யளித்தா ருறவினே
ரே

19 முன்னைப் பவத்தா லில்வாழ்நாண் முழுமா மதிப்பா
[லொருபுதல்வன்
றன்னை யளித்தே பெருநிதிக டானம்வளங்கிச் சின்னாட்
[பின்
மின்னைப் பயின்று யோகநிட்டை மென்மே லோங்க
[வெறுத்தினிமே
லன்னை வயிற்றிற் பிறக்காம லிருக்கும் நிலையே யண்ணி
[னார்

20 வீசு புனலும் வெண்மதியு மிலைச்சு நீண்ட சடையுடைய
வீச னிருதா ணமக்குவகை யிதற்கோப் புளதொன் றிலை
[யென்று
தேச முய்ய வடியார்தன் றிறத்தை யுரைத்தோன் திருவடி
[யிற்
பாசம் வைத்தார் யோகநிட்டை பயிலப் பரமனருள்பெற்
[றார்

21 அந்நா ளிருந்த பேருவகை யம்மவளத்தார்க் கரிதாமே
நன்னாள் வந்த தெனமகிழ்ந்தார் நம்ப னருள்பெற்றுய்தற்
[குப்
பன்னா ளெஞ்சி னினைத்தபடி பரமன் வதியுந் திருத்தளி
[கள்
தந்நா ருடனே தான்செல்ல நயநதா நந்த நற்றவரே

22 ஆர்வத் தொடு மப்பொழுதே யகன்று வடியார் முறை [சொன்ன
பூர்வத்தலங்கள் பலகாண புரிவுற் றெழுந்து புறப்பட்டு
சீருற் றுடைய சுற்றத்தார் செல்வம களுந் தநயனொடு
மேருற்றுலவு பெருமான்வா ழிராமேச் சுரத்தி லினிது [வந்தார்

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

23 கோதை மணக்குங் குயின்மொழியாள் குலவுஞ் சனகன் மடப்பாவை
சீதை பொருட்டா லிரவி குலச் செல்வ னெடியோ னிலங்கை சென்று
ஓதை பரக்க வரக்கன்முடி யொருபத் தினையு முடைத்து வந்த
பாதை கண்டுதனுக் கோடி படிந்தார் பவம் நீக்கிடப் பெரியார்

24 கருவிற் பிறக்கா திருக்கவழி காட்டுந் தானம் பலசெய்து
பெருவிற் பிடித்தோன் சனகியுடன் பெரிதா மரிய பூசை [செய்த
வுருவிற் காணுங் கோலமதை யுவந்து சேவித் துளமலரின்
வருவித் தான கானந்த வளர்சந் நிதியி னோர்நின்று

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

25 அஞ்சு தலையுட னிவனை யடைந்தேங் கா வமலவென் [றோர்க கணித்தன்பாக
வஞ்சு தலையுட னுவந்து வலவனையுங் காலிலியு மணிந் [தாட்கொண்டா
யஞ்சு தலையடைந் தவிதிக் கரியவொரு சிரந்தடிந்தா [யடியார் யார்க்கு
மஞ்சுதலை யடையாதி ரனவகத்தே யமர்ந்தவனை யமல [போற்றி

எழுசீர்க்கழி நெடில்

26 என்று தொழுதே யடியார்க ளிருக்குந் தேவா சிரியன் [முனை
சென்று நாவ லூராளி செப்பியு வந்த தமிழ் மறையி
னன்று திருத்தொண் டத்தொகையை நவின்று நெக்கு [நெக்குருக
நின்று செது மாதவரி னோர்சென் றிறைஞ்சித்தொழு [தகன்று

கலிவிருத்தம்

27 மலைவளர்கா தலிபதமு மன்னுவிசா லாட்சியையு
மலைவளர்செஞ் சடிலத்து வண்ணலையுந் தொழுதேழு
நிலைவளர்கோ புரம்வணங்கி நீங்கரிய வாதரத்தால்
கலைவளர்மா மதிபோன்ற கண்ணப்பர் தனைநினைந்து

அறுசீர்க்கழில் நெடிலாசிரிய விருத்தம்.

28 அங்க ணகன்று தொண்டைநா டரியதலங்க நதிப்பனென
செங்கண் விடையார் பொருந்திவா டிருக்கா ளத்தி [சென்றடைந்து
தங்க ணிடந்து தனிமுதற்குத் தாமே சாத்தி வலம்நின்ற
பொங்கு மார்வத் தடிகள்பதம் போற்றி புனிதர் பதந் [தொழுதார்

29 அந்த நாட்டிற் றிருத்தலங்களையாறிரண்டு பணிந்தரக்கன்
சிந்தை மகிழப் பிடித்திழுக்க திருக்கோ கர்ணந் தொழு [திறைஞ்சி
எந்தை பெருமான் பருப்பத்தே யிருக்குந் தலைமைந் [தயுமகத்தில்
விந்தையாக நினைந் துருகி மென்மே லார்வ மிகப்பொங்க

30 எழுந்தா ரங்கண் டொண்டைநா டினிய வளங்கண் டடி [யார்தஞ்
செழுந்தா மரைத்தாள் முடிசேர்த்த செக்கிழார் சொல் [லமுதுண்டு

விழுந்தார் படியிற் றொழுதெழுந்தார் மேலும் பிறவிச்
[சாகரத்தி
லழுந்தா தெழுந்த தவப்பெரியா ரணிமத் தியநா டடைந்
[னரால்

31 நடுநா டதுகெல் வாயிலறத் துறைமேமுத ஞான னயனுந்
தடமாற் றங்கொண் டலைந்ததிரு வண்ணா மலையே தலம்
[வரையுங்
கடுவார் கண்ட னடிபோற்றி கருது தலம்பத் திரண்டிரண்
[டும்
உடுநா யகனைச் சடைக்கணிந்தோ னுயர்பல் பதிக டுதித்
[தகன்று

32 கொங்க நாட்டி னுயர்தானங் குறித்த பதிக ளோரேழும்
பாங்காச் சென்று தொழுதிறைஞ்சிப் பரமர் திருவஞ்சைக்
[களத்தில்
நீங்கா வன்பு பூதியென நினைத்த பெருமா னடிநினைந்து
வோங்கார தஞ்சப்பர் திரு வுபய பாதந் தொழுதுய்ந்தார்

33 எந்தை பெருமா னீழநாட் டிருக்குந் தானமிரண்டினையுஞ்
சிந்தை மலரா லர்ச்சித்துத் தெய்வப் பொன்னித் தென்
[கரையிற்
பந்தம கற்றும் வாட்போக்கி பணிந்து குழகர் கோயில்
[வரை
வந்து நியமத் துடனூற் றிருபத் தேழும் வணங்கினார்

34 சிறந்த பொன்னி வடக்குவந்து தில்லைமுத லீங்கோய்
[வரையும்
பரந்த ஞானத்துடன் பரவி பணிந்தா ராறு பதின்மூன்று
முறைஞ்சேர் புயத்தி லாரமணிந் தொங்கு செண்டான்
[மேருபுடைத்
தறஞ்சே ரிதயத் தொடுநிப்ப மணிந்தோனாட்டை யடைந்
[தனரால்

35 மன்னர் பெருமான் வருந்தக்கான் மாறியாடும் பதமுதலா
முன்னமுளைத்த செழுஞ்சடரு முனைப்போர் சாய்த்த
[வன்னையோடுங்
கன்னல சிலைவே ழங்கறிக்கக் காண்டீ யென்றோன் பதங்
[களையு
மின்னல் களைய வேண்டுமென விறைஞ்சித் தொழுதார்
[மாதவரும்

36 பாண்டித் தலங்கள் பதினாலிற் பதின்மூன் றுங்கண் டுவந்து
[நெல்லை
வேண்டவ ளர்ந்த மூர்த்தியையும் வேணுவ னமமார்
[மூலனையுங்
காண்டற் கரிய சோதிமிகு காந்திமதி யம்மையுந்
[துதித்துத்
தாண்டற் கரிய பவக்கடலை தாண்டநி னைத்தார் தனி
[யெழுத்தை

37 இவ்வா றினிதிங் கிருந்திடுநா ளிதயத் தருளார மமுதுண்டு
வுய்வார் கிளைஞர் புடைசூழ வோங்கு நெல்லைதனில்வதிந்து
மையார் கண்டர் திருமகனார் வாழு மலைவாய் தொழக்கருதி
நைவா ராகி யுளம்பெருகி நாளுந் துதிப்பா ரெழுத்தாறும்

38 வாதைபடு மிந்திரன்மான் முதலாய தேவர்க்கா வடிவே
[லைநதி
தீதுமிகு சூர்தடிந்த தேவர்சே னாதிபதி திருமுன் பேக
வாதரங் கொண் டிழுத்திடலு மறுகான கான்முனைக
[ளயலார் சூழப்
பூதலத்தி லறுமுகனார் பொலிந்துவளர் திருச்செயந்திபுரத்
[தில் வந்தார்

39 பெருக்கோ தத்தரங் கத்திற் பிறண்டுதவழ் சங்கினமும்
[பெற்றிவாய்ந்த
விருக்கோ லமிடு மறையோ ரொழினலமுங் கொடிமரமு
[மிறைசேய்சீர்த்தி

யுருக்கோ டுமெடி யார்க ளோதுதமிழ் மறைவளமு முயர்ந்
[ததான
திருக்கோ யிற்கோ புரமுந் தெவசண் முகவிலாசச்
[சிறப்புங்கண்டு

40 சிந்தை மகிழ்ந் தன்பொடு வடியார்க டிருக்கூட்டந் தெரி
[சித்தாங்கு
வந்தவர்க ளுடன் கூடி மணன்மேட் டிலகுதிகட்கு
[வணங்கித் தானுஞ்
சந்தவரைப் பெருமான்முன் சங்கற்பந் தனைச்செய்து
[சார்ந்தா ருய்யுங்
கந்தபுட் கரணி தனைக் கண்டுபடிந் தானந்த கண்ணீர் வார

41 உம்பருய நஞ்சுண்ட வொருமுதல்வன் றிருமகன் முன்
[றோத மாடிக்
கம்பித மாய வனடியைத் தொழுதமரப் பிடிவள்ளிகண்டு
[போற்றி
யெம்பெரு மானெனக் கினியிவ் வாசைவெறுத் திடஞான
[மீவா யென்று
தம்பெரு மானரு ணினைந்தே தவப்பெரியார் சநிதானந்
[தனிலே நின்று

கலிவிருத்தம்.

42 சங்கரிக்குந் தனிவங்க முர்கடல்
சங்க ரிக்குத் தனிமரு காசிவ
சங்க ரிக்குத் தனியிளஞ் சேயசூர்
சங்க ரிக்குந் தனிவேல னேசரண்

43 வைய மீதுலா மறுகிற் பிணிமுக
வைய மீதுலா வருந்திற லுமய
வைய மீதுலா வருபவ நித்தில
வைய மீதுலா வருங்கு மாரசரண்

44 மாயை பெற்றமா னுக்கு மருகனே
மாயை பெற்றமா மைந்தரை வாட்டியம்
மாயை பெற்றமா மஞ்ஞையூர் தியிவண்
மாயை பெற்றவென் மாசுதீர்த் தாள்சரண்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

45 முன்னாளின் மலையமுனிக் கரியவிலக் கணஞ்சொன்ன முறையினாலே
யென்னாளு மெஞ்ஞான பண்டிதனா மெனுநாம மிலங்கப் பூண்டா
யின்னாளி லெனக்கருள்வா யெனத்துணிந்தே னிணைச்சார்ந்தே னென்றுருய்ய
நன்றுமைத் தெழுத் தைந்தும் நங்கடப்ப னவர்தேற நவின்றிட்டானே

46 மெஞ்ஞான பண்டிதனாற் றனக்கருளு மைந்தெழுத்தின் மெய்ம்மை யாவுந்
தஞ்ஞானத் தாலறிந்து தநயர்சுற்றந் தான்வெறுத்துத் தாணிமீது
வுய்ஞ்ஞான மிதுவாகு மெனவுளத்தின் மிகவோர்ந்து வுண்மை யாகு
மிஞ்ஞானந் தணவாம லியம்பரிய நிட்டைதனி லிருந்தா றன்றே

கலிவிருத்தம்

47 இந்த வண்ண மிவரிறை யோன்மகன்
சந்த மாமலை தன்னி லிருந்திடச்
சொந்த மான தநயருஞ் சுற்றமு
மெந்த வண்ணமீ தாருமென் றெண்ணினார்

48 கந்த வேடனைக் கண்டு: ணிந்திட
நந்த நாதனும் நாமும டைந்திடப்
பந்த மானவை நீக்குமிப் பண்டிதன்
தந்த காரண மோவெனச் சாற்றுவார்

49 முந்த யோரிவர் மோன நிலையறிந்
திந்த வாறெவ ராலும றிதெனச்
சிந்தை செய்து திகழ்தரச் சீரிய
ரெந்தை யாரையே யெண்ணி யிருந்தனர்

50 காற்று நற்பக லென்றுங் கருதிடார்
சாற்று வார்கட்குத் தானுத் தரங்கொடார்
போற்று வார்கட்குப் புன்சிறிப் பேசெய்வா
ரேற்று நாயக னற்பத மேற்றுவார

கொச்சகம்.

51 அந்தோவீ தென்ன வதிசயங்கா ணென்பாருஞ்
சிந்தாகு லமிலையே செட்டியார்க் கென்பாரும்
பந்தமாங் கூட்டத்தார் பரதவிக்கப் பார்ப்பதெவன்
கந்தாவே னச்சிலர்கள் கைதொழுது போவார்கள்

52 பின்னுஞ் சிலர்கள் பெரியார்முன் ருணைகி
மின்னொடு நின்றநயர் மெலிந்து வருந்திடநீ
ரென்னை கண்மூடி யிருந்திடவும் ஞாயமல
தென்னை ரிருந்தார் திருவுளமோ வென்பார்கள்

53 சானகியின் மாறனுக்காத் தானுதித்தார் நெல்லைநின்று
வேனந்தவிர் தீர்த்தத் தெழிற்சீ ரலைவாயி
லேனல்வனங் கண்டுவந்த வெழில்வேடன் முன்றிலவந்து
ஞானம் பெறவந்த நற்றவரென் பார்சிலர்கள்

54 இந்தவண மெல்லோரு மியப்பிப் பெருந்தவர்பாற்
சிந்தை மகிழ்வானுனுஞ் செல்வமக்க டம்பேரில்
வந்த பரிவதனால் வருத்தமெய்திச் சந்தவரை
எந்தையே தீர்த்தா ளெனச்சொல்லிச் செல்வார்கள்

55 பரனுமத் துள்ளிருத்தி பகாரிய வாறிரண்டு
கரனார் திருவடியே கருதிடவென் றேநான்கு
சிரனா ரமைப்பென்று செப்பிச் சிலர் நடக்க
வரனார் சேய்முன்னா லமர்ந்த வருதவரும்

56 இருந்துவிட்டை கொண்டாரங் கிருந்தா ரறியாமற்
பருந்துபோற் சென்றுமே பாங்குளநற் சாலையிலே
யருந்தவங்கள் செய்யமன மையிறக்க விற்றிருந்தார் [ள்
வருந்துசுற்றத் தார்கள்பண்டி வைத்திழுத்துப் போனார்க

57 சுற்றத்தார தன்தநயர் சூழ்ந்துவழி கொண்டேகப்
பற்றற்றார் தங்கிளைஞர் பார்க்கத் தெரியா தே
முற்றுந் துறந்து முழுநீறுங் கந்தையுமாய்ப்
பெற்றத்தார் பாதம் பிடித்திருந்தார் சாலைதனில்

58 சொல்லார்ந் தவேதச் சுருதியான் றன்பாத
மல்லாற் பிறிதொன்று மாதரியா தேயிருக்கும்
நல்லார் தமைத்தேடி நாடி வருகின்ற
வல்லா ரறியார்கண் மாதவரும் பார்த்திருந்தார்

59 தேடியசுற் றந்தநயர் சிந்தை தளர்வெய்தி
வாடியபூப் போல மயங்கிவ ருந்தியெங்கு
மோடிய லைந்தலைந்து வோடுவார் மனஞ்சலித்து
நாடிடோம் நல்லாரை நாமென் றகன்றனரே

60 அல்லல்க ளூர்ந்ததென வறிந்த பெரியாருங்
கல்லாற் கீழ்வீற்ற கமலபத மேகருதிப்
பொல்லார்க்கு நற்குணங்கள் பொருந்தவு ரைக்குமவர்
நல்லார்க்கு ஞானநிலை நன்மைகளைடப் பிடியென்பார்

61 இந்தவண மாயிருநது வெங்குமையம் வாங்கியுண்டு
தெந்திருப் பேரைச்சாலை சென்றிருந்தார் மாதவரும்
அந்தநகர் சுற்றளவு வைந்திரண்டு நாளிவழி
எந்தையடி யாரருளா லெங்கும் விளைவதிகம்

62 பாலைதனிற் சென்று படுப்பார் பகன்முழுதுஞ்
சாலை நடுவாகச் சயனிப்பார் நள்ளிரவில்
வேலனருள் பெற்றார்மேல் விரைந்துபண்டி யோடியுமே
யாலம ருந்துமர னன்பர்க் கழுத்தவிலை

63 அவவிடத்தி லிவ்வண்ண மாண்டிரண்டு தானிருந்து
செவ்விடம் பார்த்தேதவசு செய்யம னந்துணிந்து
மைவிடமார் கண்டர் வாழ்நெல்லை தன்மனத்தே
கவ்விந டக்கையிலே கண்டார்கிட் ணுபுரத்தை

64 இந்தநகர் சாலைதனி லினியதவஞ் செய்வனெனத்
தந்திரம்வந தேகவே தானிருந்தார் மூவாண்டு
எந்தைய ருள்பெற்றே யிருப்புக்கோர் யோசனைதாஞ்
சிந்தாகு லமில்லைச் செந்நெல் விளைவதிகம்

65 அங்கிருந்து நெல்வேலி பணையவு ளங்கருதிக்
தங்குமிடஞ் சாலைவழி சார்புளவூ ரிரந்துண்டு
வங்குதனைப் பற்றிவிடா வல்லுடும்பு போலமனம்
பொங்குகின்ற வாதரத்தாற் புண்ணியருந் தானடைந்தார்

66 மின்னுருஞ் சடைப்பெருமான் வேணுவன நாதருக்குக்
பென்னுளு மர்ச்சிக்கு மெசுர்வேத சன்மரகங்
கன்னுமன் முகிறடுத்துக் காத்துநெற்கு வேலியிட்ட
பன்னுகமணிந் தார்வாழ் பதிநெல்லை வந்தனரால்

67 அன்புபிழம்பா நின்றதிரு வடிகளகத்தே மறவாம [ளன்
லென்புநெக்கு நெக்குருக விருந்தார் நெல்லைதனிற் சின்
பின்பு திருமால் வடிவுசிவ வடிவமான் பெரும்ப திக்கண்
ணின்புற் றிழுக்கும் பேரன்பா லெழுந்தச் சாலைவரும்
போது

அறுசீர்க்கழி நெடிலாச்சிரியம்.

68 நெடியோ னுடனே யிறைபவனும் நிகரில் வெவ்வே
றுருவெடுத்து
படியிற் பதிசர் போன்மாறைப் பதியி லடியார் பக்கல் சிவ
வடிவே பெரியார் போலவிங்கு வணங்க ளீயவ ருகலைநீர்
கடிசேர் சோலைக் குற்றாலச் சாலைகாண் பிரவரை யென்று

69 செல்வம் பொழியு மாருந்தைச் சீர்சேர் சொக்கலிங்க மன்புக்
நெல்லை யில்லா னிடமியம்பிப் பிரண்டு பேருஞ் சென்றதற்பின்
மல்லல் தருமாதவர் வரவென் றுரைத்தா ரறியா மயங்கிடினும்
நல்ல வாழ்வு நம்மூர்க்கு நாட்டமென்றே யவர்மகிழ்ந்தார்

70 பெசும்பத் தொன்பதுநூறு பின்சார் பதிமூ தருடமதி
லீசனடிக டிறமுறைத்து விரண்டு வாரங்களித் ததற்பின்
தேசம் புகழும் நெல்லைக்கே சென்றார்க் கவர்தான் வரும்போது
நேசமிக்கார் புதூர்ச்சாலை நெறியிற் கண்டார்நிறைதவத்தை

71 செற்றார் புரமட்டவ னடியார் சிறுதுண் டிடுப்பி லொருகந்தை
வற்றா தனமே கொடுக்குமொரு தகரப்போணிம றைத்திடலுங்
கற்றா ரிடக்கா லிணைமடக்கிக் கரைமற் றொருகா றணைக்குந்திப்
பற்றார் நமக்கென் றேபூமி பார்த்தே யிருந்தார் பானடியார்

72 முன்ன மிருவர் நமைத்தேடி மொழிந்த வேதத் திருவாக்காற்
சொன்ன முறையே கதுப்புகளிற் றோன்றும டையாளங் கண்டு
கன்ன லமுதே யடியார்கள் கருது மிதயா லயத்தேனே
யின்னல்களைந்து வருடருவா யெளியே னிதயச் சிவப்பொருளே

73 என்று துதித்துப் பலவாரா யிணைத்தா னிறைஞ்சு மவரிடத்து
வொன்றும் புகலா துயர்பெரியா ரொசிபூங் கொம்பு போலிருக்க
நன்றி யறியேன் செய்பிழைக ளுதாபொருக்க வெனவங்கு
வொன்றி யிருந்து சொக்கலிங்க முருகித் தொழுதூர்க் குடன்வந்து

74 வந்து வுளத்தே னூற்றெடுக்க யாறை மாக்கள் சிலரிடத்
திற்
சந்தி வந்தார் நெல்லைநின் றுதயமே யெனுநல் வரும்
போது
முந்து வென்பா விருமூர்த்தி மொழிந்த முறையே முதி
யோரைச்
சிந்தை மகிழத் தெரிசித்தேன் செப்பா ரென்பாற் சிறி
தேனும்

75 ஒப்பர்க் கரிய மாதவரை யுயர்வான் பொருளென்றே
சிலர்கள்
செப்பத் தெரிந்த துடனேயிற் றெரிந்தே னென்ன
றனில்யானு
மெப்பற் றுகளு மவர்க்கில்லை யென்று மொழிந்தா னிது
நிற்க
தப்பற் றவர்தாம் பின்னடத்துந் தகைமை யெடுத்துச்
சாற்றுவாம்

76 ஓங்கும் வடிவேல் தரித்தவன்வா ழோகக நின்றன்
பொற்றை முதற்
பாங்கு சாலைவழி வல்லான் கோட்டை பரப்பு வரைநா
ட்டம்
நீங்கா தங்கு மிங்குமா நிகரி லாதோ னிருக் குங்கா
லாங்காங் குள்ள புலப்புறவு வதிகமா கவிளைந் தனவால்

77 காத முள்ள சாலைவழி கண்டோர்க் கிதம்ப லெடுத்தோதி
பேத மில்லா வடியார்க ளெச்சா தியரில் லானூனும் [சிப்
பேத மில்லா திவந்துண்டு பெருமான் கருணைத் திறமே
பூத நாத னுருப்போ லிந்தார் புதூர்த னிலும்பிச்
சைகொள்வார்

78 பிச்சை யுண்டு சாலைதனிற் பிறிதற் கரிய நிட்டைசெய்வ
ரிச்சை சால வடிவேல னிருக்கும் பொற்றை தனிற்சேர்
வார்

பச்சை மாலுந் தேடரிய பரம னருட்பற் றடைந்தவர்க்கு
விச்சை மிகவே யிருந்தாலும் வெளியே யெவர்க்குந்
தெரியாதே

79 ஆலாலத்தை யமுது செய்தோ னடியார் பசியாற் சாலே
நின்று
காலா னிளைய விரைந் தேகி கருணா கரன்றன் றிருமகனும்
வேலா யுதன்ற னருள் பெற்றோர் விளைவார் புதூர்தனில்
வந்து
மேலாங் கங்கை குலத்தொருவன் விரும்ப வவன் வாழி
டத்திருந்தார்

80 இடடா னறியா னெனுமூல மெடுத்த திருமந் திரமுறையிற்
றட்டா னறிந்தா னெனச்சொல்லற் றனதுகு லப்பேர் ரென
நினையு
மொட்டா வொட்டும் பொற்கொல்ல னொருவன் மாறை
சுப்பய்யா
வெட்டாப் பழமிவ் கெட்டியதென் றிருந்த பெரியார்
தமைக்கண்டான்

81 கண்டா னந்தப் பெருவாழ்வின் கானஞ் செவிகட் கமு
தெனவே
கொண்டா னந்தத் தாற்றொழுது கூறற் கரிய வானமுத
முண்டா னகம்போ லோகையுற்றெம் மூர்க்கு வடிகள்
வருகவென்று
ரெண்டோ னிறைவன் றியானத்தார் வருவே னூனையென்
றிசைத்தார்

82 வருவே னூளயெ னவருளி வளர்சா லேயினி லிரவு தங்கி
யருணோ தயசமயத்தி லடிக ளெழுந்துவ ரப்பார்த்து
கருணா கரன்ற னடியாரைக் கருதி யில்லிற் கழைத்தென்
றென்
பெருவாழ் வேயிச் சாவடியி லிருப்பீ ரென்று பிரார்த்தித்
தான்

83 ஆங்க ணிருந்த வடிகளந்த வாசாரிகள்வீ தி யிலையம்
பாங்கா வாங்கி யனமருந்திப் பசிதீர்த் தெழுந்து கடையில்
வந்து
வாங்க வேண்டு வனவாங்கி வானோர் தலைவன் பதம்பரவிக்
கோங்கார் சோலைக் குற்றாலச்சாலைவ ழிக்கே குறுகினார்

கலிவிருத்தம்.

84 மற்றொரு நாள் சுப்பய்யா வாழ் மனையின் மாதவத்தோர்
சித்துரு வாய் வந்திருக்கத் தெரிந்து வந்த சொக்கலிங்கம்
நற்றவத் தார் தாழ்வணங்க நம்முன் னோர்செய் தவத்தாற்
பெற்ற தெனக் கண்ணார்வம் பெருக வடி பணிந்தான்

85 எம்பெருமான் றன்னடியா ரெழுந் தருளச் சாவடியின்
முன்பொரு வன் யாரோ முன்ன மேதா னிருந்தா
னப்பெரு மானலந் தெரியா தாரைநீ யென நவில
உம்பர் பிரா னடிக ளுடையவ னறிவ னென்றார்

86 பொச்ச மில்சீ ரடியார் புகழை யறி யான்பா
லச்ச மயஞ் சொக்கலிங்க மறைந்தான் கரச் சைகை
யிச்சை யில்சீர் செட்டியா ரெழுந் தங்கிரு மென்று
நிச்ச யமா யிற்குடை போ னிகழ்த்த வவர மர்ந்தார்

87 அந்நேர மிற்கு டையா னனைசோறு மோர் சேர்த்துத்
தன்னை யிலான் றகரப் போணித னிற்று னிடனு
முன்னை முன்றினில் வைத்து முதறிஞர் பசிபி னர்போ
வின்ன முதுதா னுண்டு வெஞ்சி யதைக்கொண் டகன்றார்

88 அடியா ரகன் றருள வப்போது சொக்கலிங்கம்
வடிவிற் சிறந்தமகான் வந்தாரிங் காமாகி
லடிசின் மிகவளித்தே யனுப்புவதே யல்லாமற்
படியிலவர் பால்வேறு பசொறு தென் றுரைத்தான்

அறுசீர்க்கழி நெடிலாசிரியம்.

89 சீரிய ரகன்று சின்னாட் சென்றபின் மாறை மூதூர்
சேரியல் கடையின் பக்க மெழுந்தருள் சோலை முன்ன

ரார்தரு சொக்க லிங்க மறிந்தவர் பணியுங் காலை
யோர்விலான் மளிகை யுள்ளா ரொருபழ மழுக லீந்தான்

90 ஆங்கதை யேற்றுக் கூரா தன்பருஞ் சாலை சென்றார்
பாங்கமர் சொக்க லிங்கம் படியினீர் செய்க வண்ணந்
தீங்கது வாகும் பின்னாற் சிறந்தவ ரினிமேல் வந்து [னே
வாங்குவ ததுவு மென்பேர் வரைந்து கொள்வீ ரென்றா

ஷை சந்தம் வேறு.

91 மாதோர்பாக னடியர் பின்னுண்மாறை சிவேதை வீதியினி
லேதோவையமேற்ப தற்கா விசையும் போதப் பசிவதியும்
நாதனுமம் பெற்றவன் றனலஞ்சேர் தலைவா யிற்கூடிப் [யே
போதுபோக்க விருந்தவர்கள் போற்று திருந்தா ரடியனை

92 தக்கோ ரிவரென் றறியாமற் சங்கர லிங்க மென்பவனும்
பக்கம் நின்ற வடியவரைப் பாடுவீ ரென்று ரைத்திடனு
மக்காலத்தில் வராகியினு லறிவு குறைதல் கிறுகிறுப்பு
விக்கா லையினி னேர்ந்ததனு விசையா தெனவங் கிருந்த
வர்கள்

93 அநதோ வடிக ளெம்மூருக் கார்ந்தங் கெமது வீடுகளில்
வந்து பிச்சை கொளவேண்டு மென்ன விசைந்தார் மாதவரு
மூந்து முறைபோ லந்தவழி முதல்வ னடியார் குறுகிடநற்
சந்த மிசைதேர்ந் திடும்பரம சிவனுங்கண்டான் றக்கவனை

94 கண்டு பாத மிகவருடி காத லுடனே பூதன்மனை
கொண்டு விடவுஞ் சொக்கலிங்கங் கூடவிருந்து வமுத
ளித்தான்
பண்டு போலவங் கொருவன் பாடுஞ் செட்டியாரென்ன
செண்டு கரத்தே பிடித்தவள்சேய் ஞானமுண்டார் செப்பு
வார்

95 எந்தை யாகுங் காளத்தி யிறைவர் கச்சி யேகமபர் [ளி
சிந்தை மறவாப் பட்டினத்தார் சிறந்த பாடல் சிராப்பள்
தந்தை பாதம் பிடித்துய்ந்த தாயுமான சுவாமி களின்
பந்த மகன்ற பாடல்களைப் பாடி யகன்றார் மாதவரும்

96 நாதனேகும் பொழுதங்க ணடி யிருந்த வடியார்க [ளைப்
ளேத மறுத்து வடிகளெங்க ளில்லிற் றினமும் பிச்சைத
பேதமில்லா தெடுக்கவெனப் பிரார்த்தித் தேற்ற வதற்
கிசைந்தார்
பூத நாதன் றனையகத்திற் பூசை செய்யும் புண்ணியரே

97 இசைய நடந்த பெருவாழ்வை யிதய கமலத்தூர்தேனை
பசையுந் தளிர்சேர் சாலைதனிற் பாங்கா நிட்டை பற்றின்றி
யசையாதிருந்த தனிமுதலை யளத்தற் கரிய வருந்தவனை
வசையி லெழுந்து சொக்கலிங்க முற்றங் கழைக்க வந்த
னரே

98 அழைத்து வந்த வருந்தவர்தம் மடிகள் வணங்கி யெம்
முன்னே
ரிழைத்த தவமோ வன்பார வெழியே ளியற்றுப் புண்ணி
யமோ
தழைத்த தாளேவா னயன்றேடத் தண்ணார் முடிதாண்,
மறைத்துநின்ற
வழைக்கைப் பெருமான் றிருவருளோ வுயர்ந்தாரிங்கு
வருவதற்கே

99 வன்னமணி வாய்திறந் தென்பால் வழங்கா திருந்த
வருத்தமெலா
முன்ற லடிக டிருநோக்கான் முற்றுந் தீரத் தெளிந்
துய்ந்தேன்
பின்னல் வாய்ந்த புரிசடையெம் பெருமா னடியா
ரெழுந்துவர
வென்ன தவந்தா னியற்றியது வெழியேன் சிறிய குடி
லென்றான்

எழுசீர்க்கழி நெடில்.

100 என்று தொழுது வழுதூட்டி யிருந்தார் யாரு மேற்றி
யிவண்
ணன்று மொழிசற் குருநாத னைமஞ் சாற்றிப் பணிந்
திருந்தா

ரன்றும் பாடவேண்டுமென அறஞ்செய விரும்புவென நவிற
லொன்று பழயமொழியோதி யுரைத்தார் நாக னொரு கதையை

101 சந்த முடனக் கதை மூன்றை ட்டருமர்க் காசா னுரைத்திட லு
மந்த மிலாவிப் பொருளொன்றுக் கடியே னாளா னாற் போது
மெந்தை யெனவே குருவின்பா லியம்பு நீதி யெடுத்துரைத்துப்
பந்த மிலார்பின் சிலஞானம் பகர்ந்து நடந்தார் படர்சாலை

அறுசீர்க்கழிநெடிலாசிரியம்.

102 சிந்தனை யிடை யறாது சிவமன்னுஞ் சோதி யானும்
வந்தவர்க் கருளு ஞான வைராக்கிய தீபத் தானுங்
சுந்தரந் தன்னிற் பூண்ட கதிர்மணி யொளி யினானுஞ்
சந்தகம் மடியார் வாழுஞ் சாலையி லிரவே யில்லை

103 இன்னவா றிங்கிவ ரொழுகி யிருக்கும் நாளின் வேதமுதற்
பன்னு புராணமுப் பொருள்கள் பகர்நா லெண்ணெண் கலையிருக்
தன்னை யில்லா மாதவருஞ் சாற்றியருள வடியார்க்கு
சொன்ன முறையா லப்பொருளைத் துன்னி யுணர்ந்தின் புற்றனரே

104 ஆசான் சாலைதனி னின்று மன்பார் காசிநா தன்றன்
பூசார் முற்றத் தினிற் சிவனை புரிந்து திண்ணை நயிக்க வென்றான்
தேசா தேசவ் முக்கம்போற் செவ்வி முற்றத் திருப்பனென
வீச னடியார் மறுத்தறகா தெனவே யனமுண் டினிதிருந்தார்

105 இருந்தநா தன்றன் னிடத்தி லியற்கைத் திருநா மந்தவிர
பொருந்துந் துறவிற் றரித்ததிருப் புனையும் நாமம் புகலவென

இருந்து நீவிர் கேட்டவனைஞ் செவ்வி புரிய வில்லையென்று
மருந்து சிவமே யருந்தியவர் மாற்றமு றைக்கப் புகல்
கின்றார்

106 இந்த உலகிற் றுறவுற்றோ ரெடுத்துப் புகல்வ தெளி
தெனினும்
விந்தை புகழு மான்குட்டி விவேகா நந்தர் பரமஹம்சர்
சந்தங் கமழ்நா மம்போனம் சுவாமி நாமஞ் சாற்றவென
பந்தமி லார்மண் டிண்ணியெனப்பகர்வர் படியின்மிசை
யென்றார்

107 அந்த நாமங் காரணமென் றறிந்தேன் குருகூ
ராவணத்தார்
தந்தசிற் றண்டிக ளெலாந் தாங்கி மண்மேசர்த்
தருந்தியதா
லெந்தை யாஞ்சற் குருநாத னியல்பை யெளியே
னேருநாவா
லந்தை தீர யானறைந்தே னளவிலா சையாற்
சிறிதே

எழுசீர்க்கழி நெடில்.

108 பின்னைக் குடும்ப வரலாற்றைப் பேசுமிடத்து
மறுத்துவிட்டார்
நன்னோ ருடைய வடியார்க ளெனும் நன்குதா
முணர்ந்து
வென்னோ தன்றன் சொல்வரைந்த வேட்டை
யறிந்தின் னூல்புகன்றேன்
பன்னோ வுடையோன் பன்னோனும் பரிந்து பாடற்
கெளிதாமோ

அறுசீர்க்கழிநெடில்.

109 முத்திக் குரிய முழுமணியை முடிவிலாத முதற்
பொருளைச்
சித்திக் குரிய சிவக்கனியைச் சிந்தை பிடித்துச்
சிறந்தவர்பாற்

பத்திக் குரியார் பதிமுதலாப் பகர்வீ ரென்ற
பதமறுத்து
நத்தி யுணர்மா தவப்பெரிய நாத னுரைத்துச்
சாலை சென்றார்

110 முன்ன மிருவர் தேடறியா முதல்வனுமத் தெழுத்தோதி
பின்னல் களைந்து மாருந்தை யிவையு மடியார்க் குரைத்த
ருள
வுனனுங் குரவ ருதயத்தி லூருநாற் கடிகைக்குள் வந்து
பன்னும் ஞானச் செய்யுள்பல பகர்ந்தே செல்லுங் கடிகை
பத்தில்

111 அன்று குரவ ரிருக்குமிட மடியார் விரும்பவவர் சொல்
வா
ரென்றுங் குடக்குங் குணக்குமா யிசைந்து நடப்போ
மிராம்பகனு
மொன்றுங் கருதே மோரிடத்தி லோங்குஞ்சாலை தங்கி
டேம்
பொன்று மதியோர்க் ககப்படே மென்று புகன்று
போயினரே

ஷெ வேறு,

112 ஏந்தைமுன் சொன்ன கால மெண்ணியே யடியா ரெல்
வந்திடுஞ் சாலை நோக்கி வரவு பார்த்திருக்க வந்த [நாம்
சுந்தரக் குருவின் பாதந் தொழுதவர்க் கனங் கொண்
டேடி
பந்தம தில்லார் சொல்லும் பன்மறை கேட் டுவப்பார்

ஷெ வேறு.

113 பின்னொருநா ளடியர் குருவைப்பணிந்து பெருமானீ
யிருக்குமிடம் புகலில் வந்து
நன்னெறிநா னுபதேசம் பெறவிருப்ப மெனநவில நாதன்
கேட்டு
வென்னெறிக ளானலுந் தெரிந்தவற்றை யிங்குவந்து
விசைப்பே னென்னைப்
புன்னறிவா லதை மறுத்துப் போற்ற வந்தப் புண்ணிய
ரோர் பின்னுஞ் சொல்லும்

அறுசீர்க்கழில்.

114 ஒவ்வொருநாட் காலையினு முவணைந்து கடிகை வந்து
வுபதேசித்துத்
தெவ்வ ரென்பாற் பொருந்தாமற் சிக்கறுங்க வழிதேடிச்
செல்வேனிவ்
ரவ் வவர்தம் பிரவர்த்திக் கிடையூ றிலாமல் வந்தா
லமைவே னல்லால்
நவ்வி யொப்ப வலைந்தாலும் நான்சிக்கே னெனப்பின்னும்
நவிலும் நாதன்

115 முன்னுற் சொற்நலஞ்சேது முதற்செயந்திவரை வளங்
கண் முறையே வோதி
பின்னொரு மங்சேக விசைந்தா லுமிசையு மென விசைக்க
நாத
னெந்நாளு மடியரிடர் தீர்க்க வறுப்புறுக் கிடவோ
வியற் கையாலோ
நந்நாருங் குரவர் வராதிருந்திடவே நவிந்தடியார் நாடிச்
சென்றார்

ஷெடிவேறு.

116 மறைப் பொ ளுணர்ந்து நாதன் மறைந்து வேறிடத்திற்
செல்ல
நிறைப் பொருளுணர்ச்சி சிந்தை நிலைதளர்ந்திடச் சில்
லோரக்
கறைப் பொழுதினிற் சிவலார் குளத்திலுங் கண்டோ
மன்று
னறைப் பொழு தினிலு மாலங் குளத்திலுங் கண்டோ
மென்றும்

117 மேதகு வடியார் தம்மை வெண்கலப் பொட்ட றன்னிற்
சீதள நிறைநீர் நிற்குஞ் சிறிய வூருணி கிழ்பாலிற்
பூதமு மணுகா தங்கோர் புராதன மடத்தில் வேத
நாதனை யுளத்தே கொண்ட நாதனைக் கண்டோ மென்பார்

118 இன்னவா றறிந்தோ மென்று வியப்பியோ ருறுதிகொண்
வின்னவா றங்கே சென்று வடிகளைத் தேடிப்பார்க்க [டு
முன்னமே மொழிந்த மாறற முறைப்படி தோற்றுதென்று
சொன்னவா றறிந்தோ மென்று தொடர் சிட ரூர்வந்தாரே

119 பின்பொரு கும்பத்திங்கள் பிச்சைக்கு மாறுந்தை வந்து
வன் பொடு வடியா ரில்வி லனங்கள் வாங்கியுமே யுண்டு
தன் பெருங் கருணைசாலை சார்புள கருவை நல்லூர்
முன் பொரு வப்பா பிள்ளை முகித்தமா மடத்திற் சேர்ந்தார்

எழுசீர்க்கழி நெடில்.

120 அந்தமா மடத்தி லிருப்பதைத் தவிர வங்கிங் குஞ்சஞ் சரிப்பில்லை
வந்தது வெளியே யில்லவு மில்லை வழிவரு மாக் களி னிடத்து
நந்தம தன்பர் மாறையிற் சென்று நாமனக் கருதினே மென்று
சிந்தனை யுடையி ராங்கவர் பானீர் செப்புக வெனச் சிலர் மொழிந்தார்

121 நாதனிவ்வாறு நவின்றன ரென்று நட்பினர் நாப் பகர்ந்திடவே
சோதனைச் செயலோ வலதுநம் பால்சேர் தொடக்கறுத் திட மனந்துணிந்தோ
போதனை நெறிநூல் புகட்டவோ நாம் செய் புண்ணிய மியா தென வகத்திற்
காதனின் றிழுக்கத் நாளுமோர் வேளை கருத்துடனன மனுப்பினரால்

122 மாதவப் பெரியார் மனமுவந் துண்ண மாறையில் வாரங் கள் வகுத்தே
யாதர வான வடியரி லெழுவ ரனுப்பிய போனக மருந்தி
சீதரன் றேடமறைந்த தாளகத்திற் சிந்தித்தே பிறக்குஞ் சீரியர்பால்
வாதம் யாரேதனுந் தெரிந்திட வந்தால் வந்தவர்க் குவப் புட னுரைப்பார்

4142

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

கொச்சகம்.

123 நாத னிவ்வா றேவசிக்க நன்மை மிகு மாமடத்தி
லாதரவா வந்துதின மலகிடுதல் சுத்தி செய்தல்
மாதரவ ரீழுவரின் மரபிற் பெரிளங் களிந்தாள்
தீதரவே பணிவிடைகள் செய்து வகையுடன் செல்வார்

124 அடிக ளிருந்த அந்த மட மதிசீர் கெடு வடைந் ததினாற்
படிக ளுள்ளோ ரிரவு பகற் பார்க்கும் போதெலாம் நாதன்
கடிசேர் காமுங் கோவணமுங் கந்தை போரும் வீற்றி ருந்த
வடிவே தவிர சயன நடை வந்தோ ரெவருங் கண்டதில்லை

125 நாயக னுணவிற் சிதறுண்ட பருக்கை நறும்பல காரங் களிருக்கில்
வாயசம் வந்து மடத்தினுட் புகுந்து வணங்கியே தின்று கொண்டிருக்கும்
ஆயமா வடியா ரடுத்திட வோடு மசக்கிடை தனிலுள முடிவல்
தூயவ ருகிற் குருளைகளினுந் தொண்டர்க்கு விலகிப் பின்னடையும்

126 தனித்தநா யகனம் மடத்தினிலிருக்குஞ் சதா சிரங்கிறு கிறென்றுட்டும்
மணித்த ரங்குற்றுற் றிடுமென நிறுத்தும் மற்றதன் விசை யனுத்தெரியும்
பணித்த செஞ்சடையா னடிகள் யாரேனும் பகர்வதர்க் கிங்கு வந்திடுவோ
ரினியரனுமை மியற்றியே வரவென் றியம்பிட வவர்களு மிசைந்தார்

அறுசீர்.

127 உத்தேச மாறுமதி வரைமடத்தி லுகந்து நிட்டை யுணரும் போது
வெத்தேச காலமு மங் கிரும்பன் விழுந் தொங்கரவா விதன் கீழ்பக்க
முத்தேசத் தவர் புகழ்ந்த வோலையிறைப் புரைமுகிக்க முயல்விரென்ன
சித்தனு ருரைத்த வணஞ் சிரந்தாங்கி புரையமைத்துத் தெரிவித்தார்கள்

128 புதிதாக வமைத் தோலைட் புரையடிகள் வதியுமநாட் புரிந்து பார்த்து
வதினை யெழுந்தருள வென வடியா ரறிவிக்க வதற்கு நாதன்
பதிநாதன் சேய்மொழிந்த வேயுறு தோளியைப் பகர்ந்து படித்துக்காட்டி
விதிநாதன் சிருட்டி செய்த நாட்கோள்கண் மிக்கவெதுந் மென்மையென்றான்

129 குருநாதன் மடத்திலடி வைத்தமர்ந்த காலமுதற் கூவ ணீர்தா
னொருநாளு மிறவையிலா திருந்ததுநற் சுவைமொழுகிபுண் ணீராக
வருகான நந்தனமா வனங்ககனலா மதிமலர்களாகக் கண்டு
வருகாதா ரொருவரில்லை யாச்சரியப் பேருவகை யுலகின் யாதோ

130 அரியகுரு வமர்ந்த மடத்தருகு தெற்குப் புஞ்சைகடா மாண்டுதோறுஞ்
சரியான பலன் கொடுக்கச் சமுசாரி யொருவ னந்தா வனத்தை
மரியாதை யின்றி யெள் விறைத்திருக்க வரதனெள் விறைப்போ வென்ன
பெரிதான திலச்செடிகள் பிறண்டுறுண்டு கருகியது பின்னாளாக

131 நந்தவன மெனப் பாராதிகழ்ந்து விதைத் தெட்கருநன் பர்கண்டு
முந்தையினு மாச்சரிய மதிகரிக்க நாதனடி முறையே போற்ற
யெந்தைபிரா னடிபதியு மடம் பழுதுபார்க்க வென விசைக்கவப்போ
சொந்த முடையோ ரிருக்கச் சுகந்தையிலார் புதுப்பிக்கச் சுருதியாமோ

132 என்றடிகள் சந்நிதியிற் சீடருரைத்திட நாத னெடுத்துக் கூறும்
நன்றுரைத்தீ ரிம்மடத்தி, னந்தவனங் கூவன்மிக நன்மையாகு
இன்றுரைத்த படிசெய்வீ ரெனவோதி யதற்குவமையாக விங்கு
வொன்றுரைப்போங் கேண்மினென வோகையுட னுரைத்தனனிங் கொப்பிலாதான்

ஷெ வேறு,

133 இடிந்த பாழ் மடத்தை முன்போ லெழில்பெறப் புதுப்பித்தோர்கள்
கடுந்திடு மறலிபாசக் கயிற்றிற் சிக்கடைய மாட்டார்
படிந்திறை பதத்தை நாளும் பற்றுக்கோ டெனப் பிடித்து
விடுந்திடா முன்பூக் கொய்து வேண்டுவோர் மேன்மை சேர்வார்

134 முன்னொரு காலந் தன்னின் முக்கணம் பெருமானருனும்
தன்னொரு பாகம் வைத்த சயிலமின் கொடிக்குச் சொன்
வின்னிய னூலையாங்கு எடுத்திருந் தடியார்க் கோத [ன
அன்னயத் தருட்டீடனூர வடிபணிந் திருந்தாரன்றே

135 ஆசான ருளால டியார்க ளந்தமடத்தைப் புதுப்பித்து
கூசா தடிகடம்வா க்கிற் கூறுமுறைகளுணருங்கால்
தேசா தேச முய்வதற்குச் சிந்தை நினைந்து திருக்கயிலை
வாசா வென்று மாபரனை வழுத்தி மனசார் சிந்தித்து

136 அன்னை யான டிபணிந்து வறமையா றிரண்டினையு
மவனிமீது
தன்னை நிகரில்லாத தலத்தினிலி யானிபற்ற வருடா
வென்றோத
வென்னை யடைந் திருக்கு முனக்கது வெதற்கென்றிரு
நாழி நெற் கொடுத்து
முன்னை விதிபரியதவ மியற்றிய கச்சியிற் சென்று
முடிப்பா யென்றான்

137 மாதொருகூ றுடையானு மனமகிழ்ந்து நெற்கொடுக்க
வாங்கிக்கச்சி
மூதூர் சென் றடைவதற்கு முருகனுடன் சிலகணங்கண்
முன்னே செல்ல
தாதுகுவிண் மலர்ச்சோலை சார்சூதம் வாழிறைவன்
றன்னைப் போற்றி
யாதுலர்க்குச் சாலைமுக னுயிர் மீட்டல் வரையற
மெண்ணான்குஞ் செய்தாள்

138 இச்சையுட னிறைகொடுத்த நெற்கொண்டே யறம்
பெருகவியற்றி நிற்கும்
பச்சை மலை மகள்பக்க மாவிருந்தோன் விடைபொருந்திப்
பாரின்மீது
நிச்சய மாயெவ ராலும் நினைக்கரிய தானவறம் நீயே
யிந்தக்
கச்சி யினி லோம்பியதா லறம்வளர்த்தா ளெனுநாமங்
கருதி யீந்தான்

139 ஆதலினாற் பூவுய்ய வறம் வளர்த்ததல்லாம லன்னைக்
கிந்தப்
பூதலத்திற் கைம்மாறு வொன்றுளதோ வென்றோதிப்
பின்னுஞ் சொல்வா
ரோதுகின்ற வறங்களிலே வுயர்வான தொன்றுளது
வுலர்ந்த காலம்
பாதைகளின் மடமமைத்து நீர்மோர் பானகமிடுவர்
பாணைச்சேர்வார்

எழுசீர்க்கழி நெடில்.

140 நாதனிவ்வாறு நவின்ற மெய்நெறியை நலமென வறிந்து வம்மடத்தி
லாதுலர்முதலா மெவர்களுந் தாக மடக்கநீர் மோர் சமைத் தெடுத்து
வேதனை தாக விடாயுடனடைந்தோர் வேண்டு நீரளித் திட வேண்டி
சாதகமாக நடத்திடக் கூலிதாங் கிடு மொருவனை நிறுவி

141 அன்ன வனிருந்து வளங்கிடு மோரில திகநீரமைந்திடா தளிக்க
முன்ன வடியாரங்களை யுணர்ந்து மொழிந்தனர் தாகத் துக்கே மோர்
தன்னிடும் புணர்த்துந் தாதுக்கோ வென்று தண்புனல திகமாச் சேர்த்து
வென்னிடந் தெரிவித் தீந்திட வேண்டு மென்றுரை யாடினரவர்க்கு

எண்சீர்க்கழி நெடில்

142 குருநாத னுபதேச நெறியைக் கொண்டு குணமது கைவிடே லென்னுங் குறிப்பு மென்மே
லொருகார் வத்துடனடந்து நாளிலேதா னேது வானினு மொன்றுவுள நம்நாட்டிற்
பெருகார்வத்துடனடத்து மறத்தின் சொத்தை பின் மதிப்புச் குறைந்தாலு முயலோலத்தி
னொருகாவா ரெடுத்ததிலும் வியாபாரத்தில திலாப மடைந்திடுவரனு பவத்தில்

143 என்றடிகளுரைத்து ஞ்சிற்றறிவினத்தா லிரவிலொளிக் காக மோர்ப்பானைதன்னை
நின்றவரம்மடத் தெதிரிற் காயவைத்து நீக்கிச் சின்னாட்களித்து நெருங்கிப்பார்க்க

வொன்று மேகாணுமற் சீடரெல்லா முளம் வருந்தும்
போதங்கணுபர் தவத்தோர்
சென்ற தற்கு யேன் வருந்தல் செட்டி தர்மஞ்
செய்சாலை தனிலிருந்தே செய்வரப்பா

144 ஆதலினாற் பரத கண்டத் தைந்து நூறாண்டரிதான
வறங்கடனை யதிசீர்த்தாக
வோதுகின்ற மானுடரி லொவ்வொரு வகுப்பினுள்
ளோரு முய்யுமாறு
தொதாக வனர்க்க முன்னாட் டொண்டை மண்டல
முதலி தொடர்ந்தா ரப்பாற்
றீதகல கர்த்தாக்கள் செயப்பின்னாலே செட்டிகளே
தற்சமயஞ் செய்கின்றார்கள்

கலிவிருத்தம்.

145 என்று நாதனியம்பிடும் வாசகம்
நன்று வென்னமா றுந்தை நகருளா
ரொன்று மன்போ டுருகக் குருவின்பாற்
சென்று சேவை தினஞ்செயும் நாளிலே

அறுசீர்க்கழி நெடில்.

146 மனஞ் சேர்ந்தினிய வடியார்கள் வாழு மாறை வளத்
தின் மிகு
தனஞ் சேர்ந்தருள் காட்டிட மிகுந்த தவத்திலெழுந்தார்
சந்நிதியிற்
றினந் தோருஞ் சேவைக்குவந்த சீடர்களுக்கு முறைபுக
யினம் போனாரும் பாசிவ னிடத்திலுளைப்பாளினு[ட்டி
மொன்று

147 கங்கை முடியோ னடியார்கள் கருது மிறுதிக்குகந்தபடி
பொங்கு கூவல் கூவிளமும் பொற்புற் றமைநந் தாவனமு
மங்கை பாகன் முதற்சேயு மன்னுந் தானம் நல மென்பா
ரிங்கே யதையான் கருதவிலை யென வெல்லோரு மிசைந்
தனரால்

கலிவிருத்தம்.

148 அன்ன காலையி லேகுரு வன்புடன்
முன்ன மூவர் மொழிந்த முறைகளுஞ்
சொன்ன நாலு சுருதி யாறங்கமும்
பின்னு ஞானப் பொருள்களும் பேசுமே

149 அண்டி வந்த வடியர்கைப் புத்தகங்
கொண்டு வந்து படியெனக் கூறுமால்
பண்டு நூலொன் றிலாது பகர்ந்ததைக்
கண்ட தின்றிரங் காணப் புகட்டுமால்

150 உரிய நூலி லுயர்ந்தது வாரியம்
பொருள் விளக்க மெல்லார்க் கும்போதாதது
வரிய தாகு மனுபவக் காரமே
தெரிய வோதுவா ரென்றுமே செப்புமால்

151 பேதமைப் புலன் பெற்றுவ ரோர்ந்திடா
ராத லாலுள தாய்ந்து முறைத்திடார்
காதல் கொண்டக் கருத்து ணரார் மதி
சேத மாகுமே யென்றுரை சேர்க்குமால்

152 சமயா சாரிக டங்கிரு வாக்குட
னமயச் சேர்ந்த வழகுள பாடல்க
ளுமையும் நாதனு மொக்குமோ வித்துடன்
குமையுஞ் சேர்ந்த குணத்துடன் றேன்றுமால்

153 இயற்கை ஞானத்தா லெள்ளினு ணெண்ணெய்போன்
முயற்சி யான முதல்வனைக் காணலாஞ்
செயற்கை ஞானஞ் சிறிது பயக்குநூற்
பயிற்சி யானும் பவங்களை நீக்குவான்

154 நாவு காத்திடு நன்மை கடைப்பிடி
தேவு போற்றிதீ வினையகற் றுவென்
காவு நாதனுங் காண்டற் கரியதோர்
மாவு நாதனுள் வைத்தவ னேறினன்

155 ஈச னருள் பெற் றிருந்த வடிகளின்
வாச தானத்தின் வந்த மனுடர்க்கு
வாசி கூறி யருட்சித்துக் காட்டியுந்
தேசு காட்டுநல் வாக்குகள் செப்புமால்

அறுசீர்.

156 இவ்வாற் நாத னெடுத்தோதி யிப்பூவுதித்த மானுடர்க
ளெவ்வா றுப்வா ரருளின்றி யெடுத்த தேக மநித்தியமாஞ்
செவ்வார்ந் திலங்கு சடையனடி சேரவருட மூன்றெனக்கு
வவ்வா றுற்று விவ்வவைக்கு வடிதாழ்க்கோ லொன்ற
மைக்க வென்றார்

157 இந்தக் குரம்பை யிறுதி நிட்டை யிசைந்தாற் சுவ்வை
யிடிக்காமல்
வந்த வுடனே யவைக்கதவைத் தூரக்க வைத்துக்கொள்வீ
ரென்
றெந்த நேரம் வாய்த்தாலு மிழுத்துக் குடியான வனாலே
சிந்தை நோவா வெளியிடத்தே யிடுவீரென்று செப்பியதே

158 பின்னு மொழிவான் வான்சுருங்கிற் பெருமான் கருணைத்
திறம்பேசி
யன்ன தான மகுதிகட்கு மடியார் திறத்துஞ் செய்வீரேன்
மின்னு மழைதா னதிகரித்து மிகுந்த சாலி விளையுமெனச்
சொன்ன வாறே நடத்திவரத் தூயோனருளால் விளைவதி
கம்

ஷெ வேறு.

159 கன்னியி லுகுதி கட்குக் கஞ்சிக ளன்ன மீந்தா
லந்நகர் வளங்க ளோங்கு மதிகமா மழையும் பெய்யும்
வன்னமா விடையி லவ்வார் வளங்கினா லந்தப் பூமி
நன்னய மாகச் செந்நெ லாபமா விளைவுண்டாமால்

160 அருமையாம் புதல்வருண்ண வரிய பாலிலாத பேதைக்
குரிமை யாப்பாலீந்தோர்க ளோங்கிய மகப் பேருன்னிப்

பெருமையாய்ப்பதியில்வாழ்ந்து பெருநிதி யுடையோராகி
யிருமையு மவர்போ லியார்தா னிறையருள்பெற வல்லார்
கள்

161 பன்னரிய தவமாகுஞ் சற்குருதான் பகர்ந்த தனை
வரைந்து தந்த படிபினுலே
யன்னவ ன்றன்னரு ளகத்தே யமர்ந்து விழுத்திட வரைந்
தே னறிவிலாதேன்
முன்னவ னறன் னருள் பெற்றோ னிறுதி நிட்டைக்
கோராண்டு முன்னதாகக்
கன்னலுடன் கழுத்தடியிற் புறப்பாடு வொன்று திக்கக்
கவலையில்லான்

162 இத்துயர மடிகளுக்கு வந்தவா றெனவடிய ரிறங்கிநிற்க
வத்துயர மானுடர்க்குரியதல்ல மங்கை ருதுவான கால
மித்திரர்களுடன் கூடா வீட்டினிலே யிருந்து வெழுத்திடு
தலொக்கு
மெத்துயரு மெனையணுகா திதுவோ ரற்புதமென்றெடுத்
துச்செப்பும்

163 அடிகள் கழுத் தடிபுகுந்த புறப்பாடு நாளாக வதிசீ
வோடிப்
படிகளுளார் பார்ப்பதற்கு பதர்க்கமிக வாறுலும் பற்
றென்றில்லான்
கடிதான சிகண்டுங் கவலையிலா திருந்தானைக் கருத்தி
லுன்னி
வடிவேறு திரிசூல மென்றெடுத்துத் திருமுறையை வாழ்த்
தல் செய்யும்

கலிவிருத்தம்.

164 கல்விமிகு நால்வரையுங் கருத்திருத்தும் புண்ணியனு
ரல்லினுமே கண்டுயிலா ரரிய நிட்டை யுற்றிருப்பார்
வல்லிபங்கா வென்மீது மறவிவரா தருளென் மேரு
வில்லிகணங் காண விடைபளிக்க வேணுமென்பார்

165 தில்லைவா ழந்தணர்க ளென்னுந் திருமுறையை
யெல்லையிலா தேத்தி யிருந்தார் குருநாதன்
மல்லோங்கு தண்டுடைய மறலியென் மேல்வாரா மேற்
கல்லோங்கு நற்கரத்தா கணமனுப்ப வேணுமென்பார்

166 வல்லாரு நமச்சி வாய வாஅழ்க வென வெடுத்துத்
தொல்லை கெடுஞ் சிவபுராணத் தூயகவல் நாவினையும்
பல்லோரு மேத்தப் பகர்வர் மறலி யென் மேற்
செல்லாது நின்கணங்கள் சேர வருளென்பார்

167 கல்லாப் பிழையெனவே கரைந்துருகும் பட்டினத்தார்
சொல்லார்ந்த வேதச் சுருதிமொழி யோதி யென்மேற்
பொல்லாத சூலம் பிடித்த நமன் வாராமே
நல்லாவருள் கச்சி நாதா வெனத் தொழுவார்

168 தந்தை தாய் தமரென்னுந் தாயுமான சுவாமிகளின்
சிந்தை மகிழ் மெய்ம் முறையைத் திருநாவிலுச்சரித்து
பந்த முளென் மேன்மறலி பாசம்வீசா தருள்வா
யெந்தையே சிராப் பள்ளி யீசாவெனத் தொழுவார்

169 வாயானை மனத்தானை யென்றெடுத்து மாமதுரைத்
தாயான வங்கயற் கண்ணுபகியைத்தான் றொழுது
மாயப் பிரபஞ்சத்தான் மயங்கினேன் மறலியென்மேற்
பாயா தருடருவாய் பரங்குன்றா வென்றுரைப்பார்

170 சந்தமா ரகிலென்று சம்பந்தர் சாற்றுமுறை
சிந்தை பிடித்தோதிவலஞ் சேர்ந்தார் கழல்பரவி
முந்தமுறை மாகமா ரெனுமுன்னூல் தானோதி
யெந்தைதிருக் காளத்தி யெம்பெருமானைத்தொழுவார்

171 மருந்தவை மந்திரமென்று வளர்தோணி புரத்துவந்த
பெருந்தகையார் தான்போற்றப் பெற்றும்நெற்கு வேலியிட்
வருந்துமக கிம்பத்தார் மாறனுக்கா வேண்டவளர்ந் [டும்
திருந்தருளுந் தனிமுதலை யெக்காலு முச்சரிப்பார்

172 கொந்தாருஞ் சோலைசூழ் குறுப்பலா மேயவனைச்
சிந்தைபிடித் திச்சாலை சென்றுமறிந்தில னென்ன
முந்தைமுறை வம்பார் குன்ற மெனமொழிந்து
நந்தணிந்தான் குறுகிநின்ற நாதனையே தான்றொழுவார்

173 புலனைந்தும் பொறிகலங்கி யெனப் புகலிப் புண்ணியனார்
நலந்தரு நாவா னுரைத்த நற்பதிகந்தா னேறி
சிலந்தி மாவன்புகந்த திருவானைக் காவனையுஞ்
சலந்தரனாகங் கிழித்த விற்குடியுந் தான்றொழுவார்

அறுசீர்.

174 ஆநந்த கானந்தனிலிறுதி யவர்க்கு மாக்கன்றெழு கமலை
தானந்தனிலே யுதித்தவர்க்குந் தனிப் பொற்சபை நேர்
கண்டவர்க்கும்
கானத்தொனியான் கழலறியா தலத்தைக் கருத்தினினைத்
தவர்க்கும்
வானத்துயர்மாபதம் பொருந்தி வாழ்வாரென வப்பதி
தொழுவார்

175 பண்ணார் மொழியுடனே மகிழ்பரமா வயன் றிருமா
லண்ணு விதமனலா ருரு வண்ணாமலை நாதா
உண்ணாமுலை யுமையாளொடு மெர்வாந் திருப்பதிகம
அண்ணாமலை பண்ணாமலை யென்பா ராருணாதன்

அறுசீர்.

176 என்றே தொழுவார் பக்கமிருந் தவனை யழைத்து
மாறுந்தை
சென்றே அடியார் திருக்கூட்டஞ் சேர வருக வென்றருள
நன்றே யென்று அவனேகி நாதனருட் பாடமைத்துவர
இன்றே யிறுதி நிட்டை தனக் கென்றே யிசைத்தார்
சீடர்கள்பால்

177 அக்காலத்தி லடியார்க ளந்தோ வெங்கள் பெருவாழ்வே
எக்காலத்தி லினிக்காண்போ மென்றே சிவநாமம்புகல

முக்கால முங்கண்டுய் வதற்கு மூண்ட விதயத்தோ டிருக்குந்
தக்காரிவர்க ளென்றறிந்து மின்னுஞ் சாற்றுஞ் சற்குருதான்

178 அந்த மொழிதா னெல்லீரு மடையவிண்டி யிருக்கவென்று
முந்தமுறையா லொரு சரித மொழிந்தான மராபதிதனிலே
சிந்தை மகிழச் சுதர்பத்திற் றேவேந்திரன் விற்றிருக்கவங்கு
வந்த விசுவாமித்திரர்க்கும் வசிட்டர் தனக் குஞ் சங்கையொன்று

179 சங்கை யதனால் வந்தபழி தன்னை நானேயனுபவித்தேன்
இங்கே நம்பு நப்பு வென்று விசைத்துப் பயனு முணர்த்தவில்லை
அங்கே நடந்த சங்கையென்ற தறிந்தவாறு சொல்லத்தகமோ
எங்கே எவ்வாற் சென்றிடினு மிறுதிவரையும் பொய்புகலேல்

180 இன்னு மொழிவாறொடு சரித மென்னா ரிருந்துபட்டிதொட்டி
தன்னி னிலுவைதனைப் பிரித்துச் சாதமருந்த வருஞ்சமயம்
பன்னி யில்லா தசரீரி பழியை வாங்கிக் கொள்ளென்று
சொன்ன வுடனே பாட்டாட்டஞ் சொல்வாக்கு களுமுண்டென்று

181 அப்பாற் றலங்க டொழுது செந்தி லயில் வேல்கொண்ட தனிமுதலை
எப்போதிதயத் திருக்கவுன்னி யேத்தி யானெங்கடைந்தாலும்

ஒப்பா ரில்லா னென்னோடு கூடவிருக்க வொருவணுவுங்
தப்பா தடைந்தே னெனச்சொல்லிக் கரத்தாற் பூதிதான
ளித்தான்

182 பூதிய ளிக்கங் கிருந்தவர்கள் போற்றி வாங்கித் தரித்த
தற்பின்
னாதி நாதனடியாரு மியான் போய்வருவே னென்று
ரைக்கச்
சோதி யேமே னடக்குநெறி சொல்லவென்று துதித்து
நிற்க
வாதி யாதீர் போது தாழட்டு மென்று வாக்கருளி

183 இந்த மட்டோ டேநிறுத்து வென்று கடைசி வுபதேசந்
தந்து மேமா ருந்தைநகர் தழைக்க விதயச் சிவமுதலைச்
சிந்தை பிடித்துக் கருவை யப்பா பிள்ளைமடஞ்செய்
தவத்தினுள்
வந்தங் கெழுந்த குருநாதன் மானுட யாக்கை களைய
வெண்ணி

184 நீறேறு திருமேனி யென்றெடுத்துத் தாண்டகத்தை
நெறியே யோதி
ஆறேறு சடிலத் தெம்மண்ணல் திருவெழுத்தோதி யடி
யார் சூழப்
பாறேறு முவுலகி லுயர்கோயிற் பதியானைப் பனைக்கை
யோதி
ஏறேறு பெருமானை நாமார்க்குங் குடியல்லோ மென
நவின்று

கலிவிருத்தம்.

185 கைப்போது மலர்தூவி யென்றெடுத்துக் காதலுடன்
னொப்பிலா வாகீச ருரைத்தமுறை தானோதி
யெப்போதும் மாருந்தை யினில்வாழ் மெழிற் றொண்டர்
முப்பொருளு பெற்றுதிருமுறை யோதி வாழ்வீரால்

அறுசீர்.

186 என்றே வாழ்த்திக் குணதிசை நேரிருந்து பதுமாசன மிட்டுப்
பொன்று தடலும் பொன்னிறமாப் பொலியச் சிரநேர்விழி துறந்து
நின்றார் நோக்கச் சுழிமுனையி னேரே நிறுத்திக் கபால வழி
சென்றே சிவன்று ளடைவனெனச் சிறந்த விதயம் நிறுத் தினார்

187 காளயுத்தி கன்னிரவி கருது சிறம்பத் தொன்ப தத்தஞ்
சாலும்பூர்வ பிரதமையுஞ் சார்ந்த மாகேந்திர நாகவகரண
மேலுமிரவி தெக்கணமா யிலங்கக் கடிகை யிருபதினில்
ஞாலத்துயர் மாறுந்தை நகர் நன்மை பெருக நிட்டை கொண்டார்

188 நிட்டை கொண்ட குருவருளை நினைக்கப் புளகாஞ்சலி யாமே
அட்டமூர்த்தி திருவுருவா யடைந்தோன் பெருமை படிமீதே
யெட்டு மிரண்டுந் தெரியாத யானோ புகல்வ தெம்பெரு மா
னிட்ட வருட்டே னகத்தூரி யெழுந்த காதலா லுரைத் தேன்

189 கல்விக் கடலாம் பெருந்தகையர் கண்டோர்க்க ரிய நிட்டைகொள
மல்ல லோங்கு மாறுந்தை மக்களடியார் வந்தீண்டி
அல்ல லறுத்தெங் களையாண்ட வரியகுருவே யரும் பொருளே
எல்லை யில்லாப் பெருநிதியே யெங்கே யொழித்தாயென விரங்கி

கலித்துறை.

190 மறைமுடிவின் பெருவாழ்வே மானுடமா வந்தெங்கள்
சிறை தவிர்த்து மெய்நூலின் றிறம்புகட்டும் புண்ணியமே
நிறையருளே மாறுந்தை நிலைநிறுத்து மாதவநின்
குறைகழலின் பெருமை யெம்மாற் கூறுந்திறயாமோ

கொச்சகம்.

191 சந்தவரைச் செட்டிமகன் றண்ணருளாற் றமிழாய்ந்தோன்
வந்தவரை சேரவழி வந்த பெரு மாதவமே
அந்தவரை செல்லாதிங் கமர்ந்தாண்டாய் நாயோங்கள்
எந்தவரை தேடிடினு மினிக்காண்ப தெந்நாளோ

192 செப்பரிய மாதவத்துச் செல்வமே செல்வமெனு
முப்பொருட்கு மேலாய முழுமுதலை மூதறிஞர்
கைப்பொருளை நாயேங்கள் கடைத்தேறக் கண்டுவந்த
எப்பொருளும் நீயலவோ வெங்கொழித்தா யெனவிரங்கி

அறுசீர்.

193 எந்தைபெருமான் குருநாத னிறுதி நிட்டை கொண்டவன்று
முந்தைமுலைப் பாலுங் குழவி முதலா மெவருமுண்டிலமாற்
கந்தங்கலந்த நீராட்டிக் கௌபீனவுடைசேர் காப்புமிட்டுச்
சந்தங் கமழ்ந்த திருத்தொண்டத் தொகைதான் புகன்று பணிசாத்தி

கொச்சகம்.

194 புண்ணியரம் மடத்திருந்து பூஞ்சப்பரஞ் சாத்தி
எண்ணரிய சிவனடியா ரெழுந்து திருமுறை யோதி
பண்ணரிய மெஞ்ஞானப் பட்டினத்தார் பாடல்களும்
வண்ணமுள வாசகனார் மறையகவ லுங்கோதி

195 பூந்தராய் வந்த புண்ணியனார் மெய்முறை நா
வேந்தரா வந்தரின் மிக்க இருக் காண்டகமும்
போக்கொடையோ னட்புற்ற புரவலன்வாக் குங்குருந்தஞ்
சாந்தவனற்றாள் பிடித்தோன் றனிவாசகம்புகன்று

ஆறுசீர்.

196 எந்தை யருள்சேர் குருநாத னெழுந்த வெழிற்பூஞ் சப்பரத்தை
சிந்தை மகிழ்வோ டடியார்கள் சீர்பாதந் தோளேசேர்த்து
குந்த மமர்ந்த பரம்பொருளே கூறுந்தமிழ்மா மறைவளமே
அந்தை தீரத்தடுத்தாண்டா யதுவோ வினியா ளென வார்ப்ப

197 மாமயி லிட்ப்பால் சேர்த்த வள்ளல் சீரடியார் வந்தான்
நாமகள் வளங்கண் டோதும் நங்குரு நாதன் வந்தான்
வாமனன் முதுதன் டேந்து வரைசிவனடியார் வந்தான்
தாமரை வதனன் வந்தான் வந்தானெனச் சங்கமர்ப்ப

198 முன்னவ டிகன் மாமறை முழுவளந் தந்தான் வந்தான்
நன்னெறி மூலர் நூலை நவிலுஞ்சீர் நாவன் வந்தான்
இன்னிசை யாகச்சீடர்க் கெழின்முறை தந்தான் வந்தான்
தென்ன னாட்டெழுந்தான் வந்தான் வந்தானென சின்ன மார்ப்ப

கொச்சகம்.

199 குற்றாலச் சாலைதனிற் குடிமா ருந்தை யினில்
வற்றாது கூவல்வளர் மாகாளி சந்நிதியில்
நற்றாதுடன் றேன்சேர் நந்தா வனந்தனிலே
பொற்றா மரைவதனப் போதகனைத்தான் கொணர்ந்து

200 எம்பெருமான் சற்குருதா னிறுதி சமாதே யிருக்கத்
தம்பெருமான் சாத்தத் தருமலர் நந்தா வனங்கள்
நம்பெருமா னிங்குவர நாஞ்செய் தவமேது வெனக்
கொம்பலருங் கொத்துகளுங் குனிந்து தரிசித்ததுவே

201 அந்தவுப் யானமதி லரியகுரு நாதனையே
முந்தைமுறை நூலோர் மொழிந் தாகமப்படியே
விந்தைசேர் மாருந்தைக் குருக்களான் மெய்யடிக்குக்
கந்தநீ ரொடுபஞ்ச கௌவியமு மாட்டினார்

202 உருத்திர கும்பம்வைத் தோதி யபிடேகித்து
இருத்திக் கௌபீன மிலங்கிய நல்லாடைகட்டி
பொருத்தமுள நீறுகண்டி புட்பவகை சாத்திய பின்
திருத்தனடி கொண்டார்க்கு நிறைதூபஞ் செய்தார்கள்

203 ஐந்துவகை நிவேதனஞ்செய் தர்ச்சித்து மேகமல
தந்தா நெய்த்தீபந் தானேற்றிச் சந்நிதியில்
வந்தா ரகங்கழிக்க மாதீபா ராதனைக
ளந்தம் வரை செய்தா ரரியகுரு நாதனுக்கு

204 அப்போ தடியார்க ளரகரா வென்றோதிச்
செப்புஞ் சிவகாமந் தேவாரம் புராணம் வரை
ஒப்புவமை யில்லார்முன் ஓதிமெய்ப் பூதிபெற்று
வெப்போ தெழுந்தருள்வா யென்றே சமாதிசெய்தார்

205 உத்தமநற் சற்குருவை யோக்கு சமாதே யமைத்து
எத்திசையிற் பிருதிவியா லிலங்கு லிங்கம் பாணித்து
அத்தம் பிரதைமுன் னழுத்திய நன்னாளதனின்
முத்திபெற்றார் தன்றிருமுன் முறைபா னவகம்வைத்து

206 ஓமமுத லோம்பி யோதரிய பூசைசெய்து
சாமமுதல் வேதங்க டானோதி சாம்பசிவ
நாமமுத னவின்று நற்றமிழ்மா மறையோதி
கோமயமா தியவைந்துங் கும்பநீராட்டினரே

207 நாதன் றிருவுருமே னல்லாடை பூமாலை
வேதம் புகழ்நிறும் விரைகந்தந் தானணிந்து
பாதமருச் சித்துப் பஞ்சான்ன பட்சணங்க
ளோதமில் நிவேதனஞ்செய் தெழிலார்த்தி தான்முகித்து

அறுசீர்.

208 எந்தை யார்முன் வேதமுத லெழிலார் தமிழ்மா மறை யோதி
சிந்தை மகிழ்ந்த வடியார்க்குத் திருநீறுடனே பிரசாதந்
தந்தார் குருக்க ளய்யாவுந் தாங்கியணிந்து தாடொழுதார்
விந்தை பொருந்து மாறுந்தை மென்மேல் வளங்கள் சுரந்திடவே

209 இந்தநாத னிறுதி யன்று வெழின் மாறைக்கு முரம்பை நின்று
வந்தேன் யான்செய் தவமுண்டோ வவிட பிதாச்செய் யறப்பயனோ
சந்தங் கமழ்பா வோதடியார் தன்னோ டிணங்கி சந்நி தியிற்
சிந்தை களிக்க விராமுழுதுஞ் சேவை செய்தங் கிருந்தறிந்தேன்

210 சொல்லின் வளம் பொருளின்வளந் துகளிலா வெடுத் தோதித் தொண்டர்க் கெல்லாம்
நல்விதயத் தோடு நீவீர் நன்மைகடைப் பிடியென்று நாளுந் தோதி
யல்வி லரனுலை யஞ்சென் றடிதொழுது வடியார்க டிறத்தைப்பேணுஞ்
செல்வமது வென வுரைத்த தேசிகன்றன் றிருவடியைச் சிந்தித்துய்வாம்

211 பூதல மதின் மும்மாரி பொழிக பூசுரர்கள் வாழ்க
வேத மாகம ஙகள் வெள்வி விளங்கவீ பூதி வாழ்க
வோது மிந்நூலி னுண்மை புணர்ந்த சீரடியார் வாழ்க
கோதிலாத் தவமார் நந்தங் குருபரன் கோயில் வாழ்க.

முற்றுப்பெற்றது.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சற்குருநாதன் றிருவடிகளே சரணம்.

பிழை திருத்தம்.

பாயு	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
வசனம்	2	1	குபா	குமா
பா 1	3	2	சிந்தனை	சிந்தனை
		4	ளெனும்	னெனும்
3	3	3	கண்ணி கவின்றனி	கன்னி கவின்றளி
	4	9	வள	வழு
3	5	1	நரவ	நறவ
		3	ளாளாத	ளாத
2	6	2	துறைத்தன	துறைத்தான்
4		4	பெபர்	பெயர்
4	8	1	பகச்	பகக்
2	10	2	செ	செ
1	12	5	செய்	சேய்
2		7	மூ	மு
3		1	பூமலிஞ்	பூமலியுஞ்
3	13	1	யோன்	யோன்
5	14	1	ணிபன்	ணியன்
1	15	6	யின்	யன்

பாடு	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	17	8	ஞல	ஞல்
		15	லம	லம்
			நூல் காப்பு	
4	20	3	பன்னுட்	மன்றுட்
3	21	4	கொழு	தொழு
1	24	1	வன்	வள
3		4	வாம	வாம்
2	25	2	பூீந்தும	பூீந்தும்
			நூல்	
1	27	3	சித்த	சித்தர்
2	27	1	மாறை	மாமறை
3			தாச	தார்
8	28	3	தளிமு	தனிமு
18	30	1	நாளின்	நாளின்
		4	யணி	யளி
19		4	ஞச	ஞர்
25	31	3	குச	கு

பாபு	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
		4	யமல	யமலா
32	33	1	கொங்க	கோங்க
37	34	1	ளா	ளா
38		1	லேநதி	லேந்தி
39	35	4	தெவ	தேவ
53	37	3	முன்றில	முன்றில்
64	39	2	வந	வந்
70	40	1	தருட	வருட
84	43	3	கவ	தவ
86		1	ப	பா
104	46	2	ருயிக்க	யிருக்க
109	47	2	சிறநத	சிறந்த
112	48	3	சுநத	சுந்த
115	49	2	யிசைத்க	யிசைத்த
122	50	3	பிரு	யிரு
		4	ரேதணுர்	ரேணுந்
126	51	1	றுட்டும்	றுருட்டும்

பாடு	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
129	52	3	சகனலா	கஞளலா
131	53	1	கருநண்	கருகநண்
133		2	கன்	கள்
139	54	3	ஜேது	ஞேது
143	55	1	ஜரை	ஞரை
66	39		....	கலிவிருத்தம்
67			....	கலிநிலைத்துறை
124 } 126 }	51	....	....	அறுசீர்க்கழிநெடில்
190	65	....	கலித்துறை	கலிவிருத்தம்

உ

சிவமயம்.

மதிப்புரை.

சிவநெறியும் செந்தமிழும் சிறந்து மணங்கமழும் மத்திய கயிலையாகிய முரம்பைப்பதியில் வேளாண்மை என்னும் விழுமிய பணியை மேற்கொண்ட காராளர் மரபில் செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வமாகக் கொண்ட செண்பகக் குமாருப்பிள்ளையவர்கள் இயற்றிய இன் தமிழ்ப் பாக்கள் செந் தமிழ்த் தேன் சொரியும் செம்மை வாய்ந்ததாகும்.

இறவாத இன்ப அன்பால் ஈசன் இணையடி சேர்ந்த இந் நூல் நாயகராகிய அடியார் பெருமையை அழகிய சொற்களால் ஆர்வத்தோடு அன்பு ததும்ப அரிய பாவின் இனங்களால் இசைத்து உதவிய இக்கவிஞரது ஆற்றல் இணையற்றதாகும்.

ஊழி பெயரினும் பெயரா உரைநலம் வாய்ந்த மரபிற் பிறந்த கவிஞர் வாயிலாக உண்மைப் பெரியாரது பெருமையை உணர்வது சாலவும் சிறந்ததென்பது சொல்லாமலே அமையும்.

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் உள்ளத்துறவமைந்த ஆன்றோர் வரலாற்றை ஆற்றொழுக்கும்போன்ற அழகிய கவிகளால் அமைத்துத்தந்த கவிஞரது ஆர்வம் அறிஞர் போற்றுதற்குரியதாகும்.

சவியுறத் தெளிந்த இக்கவியின் உள்ளம் பொருநையாற்றின் தெளிந்த நீர்மையை நிகர்ப்பதாகும்.

இத்தகைய புலமை வாய்ந்த கவிஞர் இன்னும் பல நூல்கள் இயற்றி இசைப்புகழுடன் வாழுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இவ்வரிய நூலை அச்சு இயற்றுதற்கு அரும்பொருள் உதவிய ஸ்ரீமான் சி. மு. சின்னையாசெட்டியார் அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன் சுப்! சுபம்!! சுபம்!!!

M. கோமதிநாயகம்பிள்ளை,
முரம்பைநகர்.

23-12-28.